ISSN 1391-9504

# விஜய்

Vijey විජය

19.09.2012 - மலர் 09, இதழ் 29




# வேற்றுக்கிரகவாசிகள் கட்டுக்கதையா?

கண்டியரசின் இறுதி யுத்தம்

அஜந்தா ஓவியங்கள்

பெறுமதியான நூல்களை பரிசாக வெல்ல அரிய வாய்ப்பு

விபரம் உள்ளே...



வாசகர் முகம்

மாற்றங்களை காணத் தயாராகுங்கள்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இரட்டை ஆட்சியின்கீழ் வந்த கரையோர மாகாணங்கள்

பிரித்தானிய அரசு கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் கருத்துக்களை ஏற்றுக்கொண்டது. அவர்கள் இந்தியாவில் மேற்கொண்ட ஆட்சி முறையை நடைமுறைப் படுத்தத் தீர்மானித்தனர். நாட்டின் ஆட்சியையும் இராணுவ பலத்தையும் பிரித்தானிய அரசிடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதனால், இலங்கையில் இரு சாராரின் ஆட்சி ஏற்பட்டது. வரலாற்றில் 'இரட்டை ஆட்சி' என இது அழைக்கப்பட்டது.

இதன்படி, பிரித்தானிய பிரபுவம்சத்தைச் சேர்ந்த பிரட்ரிக் நோத் அவர்களே முதலாவது பிரித்தானிய ஆளுனராக நியமிக்கப்பட்டார். கி.பி. 1798 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் இலங்கைக்கும் ஆளுநர் போன்று செயற்பட்ட பிரிகேடியர் ஜெனரல் பியேர் பேதிரிக் மியூரன் அவர்கள் தனது பதவியிலிருந்து இராஜினாமா செய்தார்.

மியூரன் சேனையின் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக 'ஹியூகேலக் ஹோர்ன்' என்பவர் தேசாதிபதி நோத் அவர்களுடன் இந்நாட்டிற்கு வருகை தந்தார். இப்பயணத்தின்போது, தான் கேள்வியுற்ற விடயங்களையும் நேரடியாகக் கண்ணுற்ற விடயங்களையும் அன்று பிரித்தானிய குடியேற்ற நாடுகளின் அமைச்சருக்குத் தெரிவித்தார். அதற்கு பிரித்தானிய அரசு 5000 தங்கப்பவுன் பணத்தை அவருக்குப் பரிசாக வழங்கியது. இதற்கு மேலாக பிரித்தானிய ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களுக்கான பிரதம செயலாளராகவும் அவரை நியமித்தது. கி.பி. 1798 மார்ச் மாதம் 26 ஆம் திகதி பிரித்தானிய அரசால் கொள்கைப் பிரகடனம் ஒன்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சைகள் திணைக்கள செயற்பாடுகள் திருத்தியமைக்க நடவடிக்கை

பரீட்சைகள் திணைக்களத்தின் எதிர்கால செயற்பாடுகளில் குறைபாடுகள் ஏற்படாத வகையில், அவற்றைத் திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப் போவதாக கல்வி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ஜயரத்ன தெரிவித்துள்ளார்.




பரீட்சைகள் திணைக்களத்தின் செயற்பாடுகளை மீள் ஒழுங்கமைக்கவும் வலுவூட்டவும் அவை தொடர்பில் மதிப்பீடு செய்யவும் இதன்போது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். மேலும், கல்வி அதிகாரிகளின் திறமை விருத்தி, மேற்பார்வை என்பன தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன், தேசிய பாடசாலைகளில் 20 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப் போவதாகவும் பாடசாலை நிர்வாக கட்டமைப்பில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk



# பார்வைக் குறைபாட்டினை சரிசெய்ய விற்றமின் சத்துள்ள உணவுகள் உதவும்!

விற்றமின் சத்துக்கள் நிறைந்த உணவுகளை உட்கொள்வதனூடாக, பார்வைக் குறைபாட்டை சரிசெய்யலாம் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். அண்மையில் நியூயோர்க் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வொன்றினை அடுத்தே இது தெரியவந்துள்ளது.

பால் மற்றும் பால் உற்பத்திப்பொருட்கள், தானியங்கள், மரக்கறி வகைகள், பழங்கள், முட்டை, மீன் போன்ற விற்றமின் சத்துக்கள் நிறைந்த உணவுகளை உட்கொள்வதனூடாக, பார்வைக் குறைபாட்டை நிவர்த்தி செய்து, பார்வைப் புலனை அதிகரித்துக்கொள்ளலாம் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். அந்த வகையில், பால் அருந்துவதனாலும் வெண்ணெய் போன்ற பால் உற்பத்திப் பொருட்களை உணவில் சேர்த்துக்கொள்வதனாலும் அவற்றில் அடங்கியுள்ள விற்றமின் D சத்தானது, பார்வைக் குறைபாட்டைச் சீர்செய்யும் என்று இந்த ஆய்வினூடாகக் கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன், முளைகட்டிய தானியங்கள், ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள் அடங்கியுள்ள மீன்கள், விற்றமின் C அடங்கியுள்ள மரக்கறி வகைகள் மற்றும் பழங்கள் என்பனவும் கண்பார்வையை சீர்செய்யும் என்றும் ஆய்வில் தெரியவந்துள்ளது. எனவே, விற்றமின் சத்துக்கள் அடங்கிய உணவுகளை அன்றாட உணவில் அதிகம் சேர்த்துக்கொள்ளுமாறும் அதனூடாக, பார்வைக் குறைபாட்டை நிவர்த்தி செய்துகொள்ள முடியும் என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.



# வாகனத் தரிப்பிடத்தைக் கண்டறிய உதவும் செல்ஃபோன் எப்ளிகேஷன்



போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக வாகனங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளதால் பாதைகளில் வாகன நெரிசலும் ஏற்படுகின்றது. இந்நிலையில், ஏதேனும் ஒரு தேவையின் நிமித்தம் வாகனத்தில் சென்றால், அதனை நிறுத்துவதற்கான இடத்தைக் கண்டுபிடிப்பது பெரும் சிரமமான காரியமாகும்.



இந்நிலையிலேயே வாகனத்தைத் தரித்து நிறுத்துவதற்கு (Parking) எங்கே இடம் இருக்கிறது என்று காட்டும் செல்ஃபோன் எப்ளிகேஷன் இங்கிலாந்தில் அறிமுகமாகியுள்ளது. இதன்மூலம் வாகனத் தரிப்பிடத்திற்கான கட்டணத்தையும் செல்ஃபோன் வழியாகவே செலுத்த முடியும்.

இதற்கமைய, வாகனத் தரிப்பிடம் எங்கே இருக்கிறது என்று செல்ஃபோன் மூலம் வாகன ஓட்டுநர்களுக்கு உணர்த்துவதற்காக, முக்கியமான இடங்களில் சென்சார்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. குறிப்பிட்ட வாகனத் தரிப்பிடத்தில் வாகனங்கள் ஏதாவது நிற்கிறதா? இல்லையா? அல்லது ஒரு வாகனம் அதற்கு அனுமதிக்கப்பட்ட நேரத்தைவிட அதிக நேரம் நின்றுகொண்டிருக்கிறதா? என்றெல்லாம் அந்த சென்சார் கண்டுபிடித்துக் கூறிவிடும்.

அவ்வாறே, காலியாக உள்ள தரிப்பிடங்கள் பற்றிய தகவல்கள் ஒன்று திரட்டப்பட்டு, செல்ஃபோன் வழியாக ஓட்டுநர்களுக்கு அனுப்பப்படுகின்றன. நேராக அதனை அறிந்தவுடன் தேவையேற்படின் சென்று வாகனத்தை நிறுத்திவிடலாம்!




# பல்கலைக்கழகங்களுக்கு மேலதிகமாக 5,609 மாணவர்கள் உள்ளீர்க்கப்படவுள்ளனர்

2011 ஆம் ஆண்டின் க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், பல்கலைக்கழகங்களில் 2011/12 கல்வி ஆண்டுக்காக 5,609 மாணவர்களை மேலதிகமாக அனுமதித்துக்கொள்ளுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு உயர் நீதிமன்றம் கடந்த 12 ஆம் திகதி உத்தரவிட்டுள்ளது.

இஸட் புள்ளி பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது தொடர்பாக, இம்மாதம் 3 ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை உள்ளீர்க்கும் வகையிலான 4 விதிமுறைகள் உயர் நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் 3 ஆவது முறைக்கமைய, 4, 928 மாணவர்களை உள்ளீர்க்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில், அந்த உத்தரவை நிறைவேற்றுவது தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கடந்த 12 ஆம் திகதி உயர் நீதிமன்றத்துக்குத் தெளிவுபடுத்தியது.




இதன்போது, பல்கலைக்கழகங்களுக்கு மேலதிகமாக உள்ளீர்க்குமாறு ஏற்கனவே உத்தரவிடப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கையுடன் மேலும் 681 மாணவர்களை உள்ளீர்த்துக்கொள்ளுமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதன்படி, இம்முறை பல்கலைக்கழகங்களுக்கு மேலதிகமாக உள்ளீர்க்கப்படவுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 5,609 ஆக அதிகரித்துள்ளது.

**வாசகர் முகம்**

'விஜய்'
முன் அட்டையில்
இந்த வாரம்
இடம்பெற்றிருப்பவர்கள்:
**பிரதீப்-ஹரிதர்ஷன்,**
கிரிமெட்டிய, கண்டி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






















# வரலாற்றின் ஒப்பற்ற ஓவியர் 'மைக்கல் எஞ்சலோ'

**மறுமலர்ச்சிக்காலத்தில் ஐரோப்பாவின் ஓவியக்கலையில் புதிய ஓர் அத்தியாயத்தையே தோற்றுவித்து, வரலாற்றில் அழியாப்புகழ் பெற்ற ஓர் அற்புத ஓவியர்தான் மைக்கல் எஞ்சலோ. புனித வேதாகமத்தின் சில முக்கிய சம்பவங்களையும் பாத்திரங்களையும் உயிரோட்டமுள்ள சிற்பங்களாகவும் ஓவியங்களாகவும் படைத்த மைக்கல் எஞ்சலோவுக்கு நிகராக இப்புவியில் எவருமே இல்லை என்றே கூறவேண்டும்.**

## ஆதாமின் பிறப்பு

ஆதாம் என்பவரைத்தான் இறைவன் முதன்முதலாக மனிதனாகப் படைத்தார் என்று கூறப்படுகின்றது. இந்த ஆதாமின் பிறப்பை அடிப்படையாக வைத்து ஒரு மாபெரும் ஓவியத்தைத் தீட்டினார் மைக்கல் எஞ்சலோ. 'ஆதாமின் பிறப்பு' என்ற இந்த ஓவியம் உலகத்தில் இருக்கும் அத்தனை ஓவியங்களுக்கும் வேதம் போன்று காணப்படுகிறது.

இந்த ஓவியம் இருக்கும் சிஸ்டைன் கத்தோலிக்க தேவாலயம் வத்திக்கான் நாட்டில் அமைந்துள்ளது. இத்தேவாலயத்தின் மேற்கூரையில் இதைப்போலவே 340 ஓவியங்கள் வரையப்பட்டிருக்கின்றன. இவற்றை ஓவியங்கள் என்பதைவிட, ஓவியர்களின் அகராதி என்று கூறுவது தான் பொருத்தமானதாக இருக்கும். இத்தனைக்கும் மைக்கல் எஞ்சலோ அடிப்படையில் ஓவியரல்ல; அவர் ஒரு மகா சிற்பியாகவே திகழ்ந்தார்.

## ஓவியரான சிற்பக்கலைஞர்

1475 ஆம் ஆண்டு பிறந்த மைக்கல் எஞ்சலோ 1504 இல் தனது இருபத்தொன்பதாவது வயதில் செதுக்கிய பதின்மூன்று அடி உயர டேவிட் சிலை அதுவரை நடைமுறையில் இருந்த சிற்ப இலக்கணங்களையே மாற்றி அமைத்தது.

அக்காலகட்டத்தில் உரோமன் கத்தோலிக்க திருச்சபை தனியொரு மதமாக ஐரோப்பாவின் பெரும்பாலான பகுதிகளில் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால், அம்மதத்தின் ஆன்மீகத் தலைவரான பாப்பரசர் அதிக அதிகாரத்தோடு விளங்கினார். இக்காலகட்டத்தில் பாப்பரசராகத் திகழ்ந்தவர் இரண்டாம் ஜூலியஸ் அவர்கள். சிற்பக் கலையுடன் ஓவியக் கலையிலும் அதிக ஆர்வமுள்ள அவரிடமிருந்து மைக்கல் எஞ்சலோவுக்கு ஓர் அழைப்பு வந்தது. சிஸ்டைன் தேவாலயத்தின் சுவர்களிலும் மேற்கூரைகளிலும் வேதாகம (பைபிள்) காட்சியை ஓவியங்களாகத் தீட்ட பாப்பரசர் எஞ்சலோவுக்கு கட்டளை பிறப்பித்தார்.

## பத்தாயிரம் சதுர அடியில் ஓவியங்கள்

சுமார் பத்தாயிரம் சதுர அடியில் ஓவியங்கள் வரையும் மாபெரும் பணியை நான்கு ஐந்து ஓவியர்களின் உதவியுடன் எஞ்சலோ ஆரம்பித்தார். அவர் ஒரு முன்கோபக்காரர். அதனால், வேலைக்குச் சேர்ந்த வேகத்திலேயே, உதவியாளர்கள் அனைவரும் விலகிவிட்டனர். இதனால் ,தேவாலயத்தின் மிக உயரமான உட்கூரைகளில் ஓவியம் வரையும் மிகக் கடினமான பணியைத் தனியொரு மனிதராக எஞ்சலோவே செய்தார். மின்சார விளக்குகள் எதுவும் இல்லாத அந்தக் காலகட்டத்தில் மெழுகு வர்த்தியின் குறைவான வெளிச்சத்தில் உணவு, நித்திரை என அனைத்தையும் மறந்து எஞ்சலோ தேவாலயத்தின் விதானத்தில் ஓவியம் தீட்டினார். இதன்போது, தூரிகையிலிருந்து சிதறிய வண்ணப்பூச்சுகள் அவரது கண்களைக் கசக்கி எடுத்தன. இவ்வாறு எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியில் தொடர்ந்து நான்கு ஆண்டுகள் அவர் இரவு பகலாக உழைத்த உழைப்பின் பலனாக சிஸ்டைன் தேவாலயம் உலகின் தலைசிறந்த ஓவியக்கூடமாக மாறியது.

## படைப்புகள் எனும் குழந்தைகள்

இந்த அற்புதமான கலைஞன் இளைஞனாக இருந்தபோது, மிகத் திடகாத்திரமாகவே இருந்தார். ஆனால், இறுதிக் காலத்தில் இவர் விசித்திரமான உடல் உபாதைகளால் தவித்தார். எஞ்சலோ 1564 ஆம் ஆண்டு தனது 89 ஆவது வயதில் இயற்கை எய்தினார். அவர் மரணப் படுக்கையில் இருந்தபோது, அவரது அருகே கண்ணீரோடு நின்றிருந்த நண்பரிடம் மைக்கல் எஞ்சலோ பின்வருமாறு கூறினார்.

''நான் இந்த உலகத்திற்கு விட்டுச் செல்வது என்னுடைய படைப்புகள் என்ற குழந்தைகளைத் தான். என்னுடைய குழந்தைகள் என்று சொல்லவே அவற்றுக்குத் தகுதி இல்லை. எனினும், என்றென்றும் அவற்றில் நான் வாழ்வேன்!'' இதுவே அவரது இறுதி வசனங்களாக இருந்தன.


(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாயில் குடியிருப்புக்களை அமைக்க ஹொலன்ட் விஞ்ஞானிகள் முயற்சி



பாஸ் லான்ஸ்டோர்ப்





செவ்வாய் கிரகத்தில் குடியிருப்புக்களை அமைக்கும் முயற்சியில் ஹொலன்ட் விஞ்ஞானிகள் களமிறங்கியுள்ளனர். இதற்கிணங்க, 2023 ஆம் ஆண்டளவில் செவ்வாயில் முதலாவது குடியிருப்பை நிறுவலாம் என்று அவர்கள் எதிர்பார்த்துள்ளனர். இத்திட்டத்திற்கு 'மார்ஸ் வன்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் நிறுவுனராக டச்சு தொழிலதிபர் பாஸ் லான்ஸ்டோர்ப் திகழ்கின்றார்.

செவ்வாயில் நிரந்தரக் குடியிருப்புக்களை அமைத்தல், அதற்காக பூமியில் இருந்து முதற்குழுவை அழைத்துச் சென்று அங்கு குடியமர்தல் போன்றவைதான் இந்த திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

கடந்த சில ஆண்டுகளாக, இத்திட்டம் குறித்து தீவிரமாக ஆராய்ச்சி செய்யப்பட்டு வந்தது. அதன்படி, முதல் கட்டமாக 2013 ஆம் ஆண்டில் 40 விண்வெளி வீரர்கள் இதற்காகத் தெரிவு செய்யப்பட்டு, பயிற்சி பெறவுள்ளனர். இதன்போது, பிரமாண்ட பாலைவனப் பகுதியில் செவ்வாய் போன்ற சூழல் அமைக்கப்பட்டு அங்கு அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். பூமியுடனான நிரந்தரத் தகவல் தொடர்புக்காக 2014 இல் பிரத்தியேக செயற்கைக்கோள் உருவாக்கப்படும். மனிதர்களுக்குத் தேவையான, எந்தவொரு சூழலிலும் கெட்டுப்போகாத சுமார் 2,500 கிலோ அளவிலான உணவுப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் பொதி செய்யப்பட்டு 2016 ஆம் ஆண்டு ஜனவரியில் விண்கலமொன்றினூடாகச் செவ்வாய்க்கு அனுப்பப்படும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது.


செவ்வாயில் வசிப்பதற்கேற்ற இடம் எது? என்று

## 2023 இல் முதல் குடியிருப்பு நிறுவப்படும்!

கண்டுபிடிப்பதற்கான தளஊர்தி 2018 இல் அனுப்பப்படும். இது செவ்வாயில் பல இடங்களுக்கும் சுற்றி வீடியோ காட்சிகளை பூமிக்கு அனுப்பும். அதனை அடுத்து மனிதன் வசிக்க வீடுகள், அத்தியாவசிய பொருட்களுடன் கூடிய களஞ்சியசாலைகள், தளவூர்திகள் அனைத்தும் 2021 இல் செவ்வாயில் நிலை நிறுத்தப்படும். செவ்வாயிலும் வளிமண்டலம் உள்ளபோதும், அங்கு காணப்படும் காபனீரொட்சைட் வாயுவின் அளவு அதிகம் (95.32%). எனவே, அதைக்கொண்டு நீர், ஒக்சிஜன் தயாரிப்பது போன்ற பணிகள் 2022 இல் ஆரம்பிக்கப்படும். அந்த வேலைகள் முடிந்த பிறகு, 2022 ஆம் ஆண்டு செப்டெம்பர் 14 ஆம் திகதியளவில் நான்கு வீரர்கள்கொண்ட முதல் குழு செவ்வாய் கிரகத்துக்குப் புறப்படும். அந்தக் குழுவினர் 2023 இல் செவ்வாயைச் சென்றடையும். அவர்கள் அங்கேயே தங்கி மனிதர்கள் வாழ ஏற்ற குடியிருப்புகளை மேலும் அமைத்தல், இதர அத்தியாவசிய கட்டுமானங்கள் அமைத்தல் போன்ற பணிகளில் ஈடுபடுவார்கள். 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இரண்டாவது குழு செவ்வாயில் தரை இறங்கும். இவ்வாறு மார்ஸ் வன் திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டுக்கொண்டே செல்லும்.

# செய்மதிகள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க ரஷ்யா திட்டம்



செய்மதிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைக்க ரஷ்யா திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சோல்க்கோவோ என்ற இடத்திலேயே இத்தொழிற்சாலை அமைக்கப்படவிருப்பதாக மொஸ்கோ பிராந்திய ஆளுனர் செர்கேய் சோய்கு செய்தியாளர்கள் சந்திப்பொன்றின்போது தெரிவித்துள்ளார்.

"இது ஒரு புதிய தொழிற்சாலையாக இருக்கும்" எனத் தெரிவித்த சோய்கு, புதிய ஆய்வு நிலையம் ஒன்றும் நிறுவப்படும் எனவும் தெரிவித்துள்ளார். இந்த உற்பத்தி தொழிற்சாலையில் வருடமொன்றுக்கு சுமார் 600 தகவல்தொடர்பு மற்றும் அவதானிப்பு செய்மதிகள் தயாரிக்கப்படவுள்ளதாகவும் இதன்மூலம் சுமார் 1,000 பேர் வேலைவாய்ப்பைப் பெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை சுற்றுச்சூழலுக்குக் கேடு விளைவிக்காதவாறு ஏற்புடையதாக இருக்கும் என மொஸ்கோ பிராந்திய ஆளுநர் மேலும் தெரிவித்துள்ளார்.

பாடசாலை ஊடக சங்க விருது விழா-2012
மஹரத்மல
மத்திய மாகாண பாடசாலை ஊடக விருது விழா
செப்டெம்பர் 27 ஆம் திகதி
கண்டி மஹாமாயா மகளிர் கல்லூரி மண்டபத்தில்
Plan DailyMirror nie லங்காதீப விஜய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டியப


1798 ஆம் ஆண்டு ஒல்லாந்தரிடமிருந்து இலங்கையின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றிய ஆங்கிலேயரால் 1815 ஆம் ஆண்டுவரை பல யுத்தங்கள் புரிந்தும் கண்டியரசைக் கைப்பற்ற முடியவில்லை. தரைச்சண்டையில் சூரர்களான ஆங்கிலேயருக்கு மலையகப் பகுதிகளில் சண்டையிடும் போர் நுணுக்கங்கள் தெரிந்திருக்க வில்லை. நீர் நிலைகளினூடே கரடு முரடான பாதைகள், குளிரின் தாக்கம், வெள்ள அபாயம், மழைக்காலத்தில் துப்பாக்கிகளையும் பீரங்கிகளையும் கொண்டு செல்வதில் ஏற்பட்ட சிரமம், ஆங்கி லேய கடற்படையால் மலையகத்தில் தாக்குதல் நடத்த முடியாத நிலைமை என்பனவே அவர்களின் பின்னடைவுக்குக் காரணங்களாகின. மலையகப் போரில் ஆங்கிலேயர் அடைந்த பல படுதோல்விகளுக்குப் பின்னரே, இந்த உண்மை அவர்களுக்குப் புரிந்தது. அத்தகைய நிகழ்வுகள் எவ்வாறு அமைந்தன என்பது பற்றிய விபரமே இதுவாகும்.





## ஆங்கிலப் படைத்தளம் தரைமட்டம்


மாவில்மட, வாகொல்ல, நித்தவெல, சியம்பலாகஸ்தென்ன வட்டப்புலுவ ஆகிய கிராமங் களைச் சேர்ந்த மக்கள் கண்டியின் ஆங்கிலப்படையின் தளத்திலிருந்த பீரங்கியை 1803 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் திகதி கைப் பற்றியபோது மாவில்மட முஸ்லிம் களும் கிழக்கு வாயில் பீரங்கியைக் கைப்பற்றினர். அவ்விரு பீரங்கிக ளாலும் அவர்கள் தொடர்ந்து தாக் குதல் நடத்தியபோது ஆங்கிலேய 19 ஆம் படைப்பிரிவின் லெப்டி னன் குழுவினருடன் இருந்த லெப்டினன் பயன் மெக்லேன், லெப்டினன் என்சைன் ஸ்மித், குவாட்டர் மாஸ்டர் பிரவன், ஆமிடொக்டா ஹோப் உட்பட 19 உயரதிகாரிகளும் சாஜன்ட் ரொபர்ட் ஸ்டுவர், லெப்டினன் மர்ஸர், ரொபட் பெரி, மெலே ரெஜிமன்ட், ஜென்தொம் மற்றும் கிழக்கிந் திய ரெஜிமன்ட் ஹென்ரி ஹோலேவே, சாஜன்ட் கெரிஸன் உட்பட 51 அதிகாரி களும் உயிரிழந்தனர்.




## வெள்ளைக் கொடியுடன் சரணாகதி

தொடர்ந்து நடத்தப்பட்ட தாக்கு தலில் ஆங்கிலேயரின் படைத் தளம் தீப்பிடித்து எரிந்தது.

தாக்குதல்கள் ஓரளவு ஓய்ந்ததும் கண்டியரசின் வீரர்கள் படைத் தளத்துக்குள் நுழைய முயன்றார்கள். நிலைமையின் விபரீதத்தை உணர்ந்த அப்படைத் தளத்துக்கு தலைமை தாங்கிய மேஜர் டேவ் வெள்ளைக் கொடியுடன் தனது படை சரணாகதி அடைவதாகவும் தமது எஞ்சிய படைகள் வெளியேறப் பாதுகாப்பு வழங்குமாறும் கேட்டுக்கொண்டார். அதன்படி, அனுமதி கிடைத்ததும் ஆங்கிலப் படையினர் அங்கு காணப்பட்ட மகாவலி ஆற்றைக் கடந்து வட்டப்புலுவைக்கு மிகுந்த சிரமத்துடன் பின்வாங்கிச் செல்ல முனைந்தனர்.



## கண்டியரசின் நிபந்தனை

நிலைமை இவ்வாறு இருக்க கண்டியரச அதிகாரிகள் பின்வாங் கிய ஆங்கிலப்படை அதிகாரிகளி டம் ''உங்கள் ஆளுநர் எமது அரசருக்கு எதிராகச் செயற்பட்ட எமது அரசரின் உறவினரான முத்துசாமியை கண்டியரசன் எனப் பிரகடனப்படுத்தியிருப்பது எமது நாட்டோடு போர் தொடுக் கும் செய்கையாகும். தற்போது முத்துசாமி உங்களோடுதான் இருக்கின்றார். அவரைக் கைய ளிக்க வேண்டும். அப்போது தான் உங்களை இங்கிருந்து செல்ல அனுமதிப்போம்'' எனக் கண்டிப்பாகக் கூறினர். அத்துடன், தமது நிபந்தனைகள் நிறைவேற் றப்பட்டால்தான் பழைய ஆற் றங்கரையூடாக அக்கரைக்குச் செல்ல தோணிகளையும் படகு களையும் கட்டுமரங்களையும் தருவோம் எனவும் கூறினர்.

## ஆங்கிலப் படையின் வாக்குமீறல்

ஆளுநரிடம் அனுமதிபெறாமல் முத்துசாமியைக் கையளிக்க டேவ் இணங்கியபோதும் பின்னர் அவ்வாறு அவர் கையளிக்க வில்லை. அதனால், தொடர்ந்து அவரும் அவரது படையினரும் ஆற்றைக் கடப்பதற்காகப் படகு களைத் தேடவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆற்றின் இரு மருங் கிலும் அதிக மூங்கில் மரங்கள் இருப்பதால் நீங்களே அவற்றை வெட்டிப் படகுகளையும் தோணி களையும் அமைக்கலாம் எனவும் கண்டியரசு அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.


அதன்படி, மிகுந்த சிரமத்துடன் படகுகளையும் கட்டுமரங்களை யும் அமைக்க ஆங்கிலப்படை அணி முற்பட்டபோதும் பலமான உறுதியான படகுகளை அவர் களால் அமைக்க முடிய வில்லை. அமைக்கப்பட்ட சில கட்டுமரங்களால் ஆற்று நீரின் வேகத்தை தாங்க முடியவில்லை. இதனால், முன்னாள் வங்காள இராணுவ வீரரான கெப்டன் ஹம்ப்ரீ வட்டப்புலு வைக்கு விரைந்து ஆற்றின் அக்கரைக் குப் படகுகள் மற்றும் கட்டுமரங்களை அமைக் கக்கூடிய பொருட்களை அனுப்ப முயன்றார். எனினும், இவருடன் கூடவந்த கூலிப்படையி னர் கெப்டன் ஹம்ப்ரீயின் வார்த்தைக்கு கட்டுப்பட மறுத்து அங்கிருந்து தப்பி ஓடினர்.



## கண்டியரசனின் கடும் உத்தரவு

இதேவேளை, ஆயுதங்களுடன் அங்கு வந்த கண்டிய ரசு மக்கள், ''உங்களைத் தப்பி ஓடவிட்ட தனது அதிகாரியோடு அரசன் கோபமுற்றி ருக்கின்றார். முத்துசா மியை கைது செய்ய வும் உத்தரவிட்டிருக்கின்றார்'' என்று தெரிவித்தனர். அப்போது காட்டி[...] ஆங்காங்கே







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரசின் இறுதி யுத்தம்











மறைந்திருந்த கண்டி அரசின் வீரர்களும் அங்கு வந்து சூழ்ந்துகொண்டனர். அவர்களுடன் வந்த சில அரச பிரதானிகள் அரசனின் கடும் உத்தரவைக் கூறி முத்துசாமியைக் கையளிக்குமாறு ஆங்கிலேய அதிகாரிகளுக்குக் கூறினர்.

## ஆங்கில ஆளுநரின் தயக்கம்

ஆபத்தான நிலையிலும்கூட கெப்டன் டேவ் சக இராணுவ அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து ஆளுநரின் அனுமதியின்றி முத்துசாமியைக் கையளிக்க முடியாது எனக் கூறிவிட்டார். எனினும், முத்துசாமிக்காகப் பல ஆங்கிலேய வீரர்களைப் பலிகொடுக்க ஆளுநர் விரும்பவில்லை. இதனால், நாம் உம்மைக் கையளிக்காவிட்டால் கண்டியரசன் எமக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்யலாம் என முத்துசாமிக்கு அவர் செய்தி அனுப்பினார். அதற்கு முத்துசாமி, "மகாவல்லமையுள்ள ஆங்கில அரசு கண்டியைச் சேர்ந்த சிலருக்கு அஞ்சுவதா?" என வினவினார்.

இவருக்கு ஆதரவாக ஆங்கில இராணுவ அதிகாரிகள் சிலரும், "யுத்தம் புரிந்து முழு இந்தியாவையும் கைப்பற்றிய ஆங்கிலேயரான நாம், மலையகத்தின் ஒரு சிலருக்கு அஞ்சி முத்துசாமியைக் கையளிப்பதா?" என்று கூறி முரண்பட்டனர்.

## கண்டியரசின் தாக்குதல்

எத்தகைய தீர்வுகளும் எட்டப் படாததால் வேறு வழியின்றி தன்னைத் தொடர்ந்து ஒருவர் பின் ஒருவராக வருமாறு டேவ் தனது படைவீரர்களுக்கு உத்தர விட்டார். 200 மீற்றர் தூரம் வரை அவர்களால் இவ்வாறு முன்னேற முடிந்தது. எதிர்ப்பட்ட கண்டி அரசின் வீரர்கள் ஆங்கில இராணுவ வீரர்களைத் தடுத்து நிறுத்தினர். அப்படை அணியில் இருந்த ஆங்கில அதிகாரிகளை கைது செய்து தெருவழியே அழைத்துச் சென்று பொதுமக்கள் முன் அவர்களின் சிரசுகளைச் துண்டித்தனர். இவ்வாறே ஆங்கில இராணுவத்தின் சாதாரண வீரர்களும் சிரச் சேதம் செய்யப்பட்டனர்.

## ஆங்கிலப் படையின் அழிவு

மடுகல்லே கஜநாயக நிலமே, முல்லேகம திசாவ, மில்லவதிசாவ ஆகியோரே கண்டியரசின் படைக்குத் தலைமை வகித்திருந் தனர். அப்போது முத்துசாமியின் சிரசும் துண்டிக்கப்பட்டதோடு, யுத்தத்தில் கூட்டுத் தலைமை வகிக்காது இருந்த்தற்காக கண்டி அரசின் உத்தரவுப்படி லெவ்கேதிசாவ பலிபானதிசாவ ஆகியோரின் சிரசுகளும் துண்டிக்கப்பட்டன. இதை அப்போது 19 ஆம் படைப்பிரிவில் ஆங்கிலக் கோப்ரலாக இருந்த பான் சிலீ என்பவர் நேரில் கண்டதாக எழுதியுள்ளார்.


படுகாயமுற்றிருந்த அவர் மிகத் தந்திரமாக அங்கிருந்து தப்பியதாகவும் மறுநாள் ஆற்றுக்கு அக்கரையிலிருந்த மாத்தளை வென்டோவல் எனும் ஆங்கில இராணுவ முகாமுக்குச் சென்று நடந்த நிகழ்வுகளைத் தெரிவித்ததாகவும் கூறப்படுகின்றது. இந்த தாக்குதலில் 12 ஆங்கில அதிகாரிகளும் 22 ஆங்கில இராணுவ வீரர்களும் உயிரிழந்தனர். இவ்வாறான பல இழப்புகளின் பின்னரே, டொய்லி என்பவரை மிகவும் திட்டமிட்ட முறையில் அனுப்பி எஹல்பொலயை வசப்படுத்தி உட்பூசல்மூலம் கண்டியரசை ஆங்கிலேயர் 1815 இல் கைப்பற்றினர்.

ஏ.ஜே.எம்.நிழாம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஹங்கேரி

**அரசு:** நாடாளுமன்றக் குடியரசு.
**தேசிய பெயர்:** மெகியர் கொஸ்டர்ஸஸக்.
**அமைப்பு:** ஸ்தாபிக்கப்பட்டது - கி.பி. 895; கிறிஸ்தவ பேரரசாக அங்கீகரிக்கப்பட்டது- கி.பி.1000; தற்போது நடைமுறையில் இருக்கும் மூன்றாம் குடியரசு உருவாகியது - 23 ஒக்டோபர் 1989.
**ஜனாதிபதி** (2012): ஜானொஸ் அடெர்.
**பிரதமர்** (2010): விக்டொர் ஓர்பன்.
**தேசிய விடுமுறை தினம்:** புனித ஸ்டீபனின் தினமாகிய ஒகஸ்ட் -20.

## புவியியல்

மத்திய ஐரோப்பிய நாடாகிய ஹங்கேரியின் வடக்கில் செக்கொஸ்லேவியாவும் மேற்கில் ஒஸ்ட்ரியாவும் தென் மேற்கில் யூகொஸ்லாவியாவும் தென் கிழக்கில் ருமேனியாவும் வடகிழக்கில் முன்னாள் சோவியத் ரஷ்யாவும் எல்லைகளாக அமைந்துள்ளன. நாற்புறங்களும் நிலப்பரப்பால் சூழப்பட்டிருப்பினும் டன்யூப் நதி மூலம் க்டலுடன் தொடர்புபடுகின்றது. பெரும்பாலும் சமதரையான ஹங்கேரியின் பெரும் பகுதி சமவெளியாகும். டன்யூப் நதியே நாட்டின் மிகப்பெரிய நதியாகும். மூன்று பெரிய ஏரிகளைக் கொண்ட ஹங்கேரியில் ஐரோப்பாவின் மிகப் பெரிய நன்னீர் ஏரியாகிய பெலட்டன் ஏரி அமைந்துள்ளது.
**மொத்தப்பரப்பு:** 35,919 ச.மைல் (93,030 ச.கி.மீற்றர்).







**நிலப்பரப்பு:** 35,653 ச.மைல் (92,341 ச.கி.மீற்றர்).
**நிலப்பிரிவுகள்:** 19 மாகாணங்கள், 20 நகரமய மாகாணங்கள், 01 தலைநகரம்.
**தலைநகரமும் பெரிய நகரமும்:** புடாபெஸ்ட்.
**உயர்மலைச் சிகரம்:** கேக்கெஸ் (1,015 மீற்றர்).
**தாழ்மையம்:** டிஸ்ஸா நதி (77.6 மீற்றர்).
**சனத்தொகை** (2011): 9,958, 453. **நாணயம்:** ஃபோரின்ட்.
**மொழிகள்:** மெகியர் (ஹங்கேரியன்) 94%, ஏனையவை 6%
**இனக்குழுவினர்கள்** (2001): ஹங்கேரியர் 92.3%, ரோமானியர் 1.9%, ஏனையோரும் அறிய முடியாதோரும் 5.8%.
**சமயங்கள்** (2001): ரோமன் கத்தோலிக்கம் 51.9%, கல்வினிஸ்ட் 15.9%, லூத்தரன் 3%, கிரேக்க கத்தோலிக்கம் 2.6%, ஏனைய கிறிஸ்தவம் 1%, ஏனையவை 11.1%



**எழுத்தறிவு** (2003): 99.4%
**இணையத்தளக் குறியீடு:** .hu
**தொலைபேசி இலக்கம்:** 36
**தேசிய கீதம்**
Isten, áldd meg a magyart
Jó kedvvel, bõséggel,
Nyújts feléje
védõ kart,
Ha küzd
ellenséggel;...
என ஆரம்பமாகின்றது.


பிரதமர்


ஜனாதிபதி

அலங்கார வேலைகள், ஓவியம் மற்றும் சிற்பக்கலை, இசை, இலக்கியம் ஆகிய துறைகளில் சிறப்புற்று விளங்குகின்றனர்.

## காலநிலை

கோடை காலமானது, பொதுவாக லேசான வெப்பமாகவும் இதமானதாகவும் காணப்படும். மாரிகாலம் பொதுவாக குளிரும் மனித வாழ்விற்கு இதமானதாகவும் காணப்படும். வருடாந்த வெப்பம் 10°C ஆகும். கோடையில் அதிஉச்ச வெப்பநிலையாக 27°C முதல் 35°C வரையிலும் மாரியில் 0°C யிலிருந்து 15°C வரையிலும் காணப்படும். வருடாந்த மழைவீழ்ச்சி 600 மி.மீற்றர் ஆகும்.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2009) : பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள் : 2.977 மில்லியன்; செல்லிடத் தொலைபேசிகள் : 12.0125 மில்லியன். **இணையத்தள வழங்குனர்கள்** (2010) : 3.064 மில்லியன்; இணையத்தளப் பாவனையாளர்கள் : 6.176 மில்லியன்.

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்** (2009): மொத்தம் 8,057 கி.மீற்றர். **பெருந்தெருக்கள்:** மொத்தம் 197,519 கி.மீற்றர். **நீர்வழிப் போக்குவரத்து** (2011): 1,622 கி.மீற்றர். **துறைகளும் துறைமுகங்களும்:** புடாபெஸ்ட், டுனவ்வேரொஸ், கையோர்கொனியு, சிசெபல், பாஜா, மொஹக்ஸ். **விமான நிலையங்கள்:** 41.


## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம்: 49.58%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** கோதுமை, சோளம், சூரியகாந்தி விதை, கிழங்கு, பீட் கிழங்கு, பன்றிகள், மாட்டுப்பண்ணை, கோழிப் பண்ணை,


தலைநகரின் ஒரு பகுதி

பாற்பண்ணைப்பொருட்கள். **கைத்தொழில்கள்:** சுரங்கத்தொழில், கட்டடப்பொருட்கள், புடவை வகைகள், ரசாயனப்பொருட்கள், மோட்டார் வாகனம். **இயற்கை வளங்கள்:** பொக்ஸிட், நிலக்கரி, இயற்கை வாயு, பசளை மண், பயிர்ச்செய்யக்கூடிய வளமான நிலம். **ஏற்றுமதிகள்** (2011): இயந்திரங்களும் உபகரணங்களும் 55.31%. ஏனைய உற்பத்திப்பொருட்கள் 30.6%, உணவுப்பொருட்கள் 7.4%, மூலப்பொருட்கள் 3.2%. **இறக்குமதிகள்** (2011): இயந்திரங்களும் உதிரிப்பாகங்களும் 44.7%, ஏனைய உற்பத்திகள் 41.37%, எரிபொருட்களும் மின்சாரமும் 5.1%, உணவுப் பொருட்களும் மூலப்பொருட்களும் 6.7%. **பிரதான வர்த்தகப் பங்காளிகள்:** ஜேர்மனி, ஒஸ்ட்ரியா, பிரான்ஸ், இத்தாலி, ஐக்கிய ராச்சியம், ருமேனியா, போலந்து, ரஷ்யா, நெதர்லாந்து, சீனா, ஸ்லோவேக்கியா.

Buda கோட்டை



Széchenyi சங்கிலிப் பாலம்

## வரலாறு

கி.மு. 14 இல் மேற்கு ஹங்கேரி, ரோமானியப் பேரரசின் ஒரு பகுதியாக பன்னோனியா மற்றும் டெஸியா ஆகிய இரு மாகாணங்களைக் கொண்டிருந்தது. ஆனால், டன்யூப் நதியின் கிழக்கில் அமைந்திருந்த பகுதிகள் ஒருபோதும் ரோமானியப் பேரரசின்கீழ் இருக்கவில்லை. மாறாக, பல்வேறு ஜேர்மனிய மற்றும் எஸியடிக் மக்களின் ஆட்சியாளர்களால் ஆளப்பட்டன. கி.பி. 977-1038க்கு இடைப்பட்ட காலத்தில் புனித ஸ்டீபன் அவர்களால் கிறிஸ்தவ மதம் அனுமதிக்கப்பட்டு, நாடு முழுவதும் பரவியது. 1241 இல் ஹங்கேரிய மக்களில் சுமார் அரைப்பங்கினர் மொங்கோலியர்களால் அழிக்கப்பட்டனர். 1867 இல் ஒஸ்ட்ரியாவிடம் இருந்து சுதந்திரம் பெற்றது. இரண்டாம் உலகப் போரின்போது ஜேர்மனியின் ஆதிக்கத்திற்குட்பட்டது. அதையடுத்து, ரஷ்யாவின் ஆதிக்கம் ஏற்பட்டது. 1946 இல் குடியரசாகியது. 1947 இல் நடைமுறைக்கு வந்த கம்யூனிச ஆட்சி 1989 இல் முடிவிற்கு வந்தது. தொடர்ந்து பல கட்சி ஜனநாயக ஆட்சி நிலவியது. 2004 இல் ஐரோப்பிய யூனியனில் உறுப்புரிமை பெற்றது.

## கலாசாரம்

மாறுபட்ட தனித்துவமான கலாசார வெளிப்பாடுகளை ஹங்கேரியில் காணலாம். ஹங்கேரிய மக்கள் சிறந்த பாரம்பரியத்தைப் பின்பற்றுகின்றனர். உதாரணமாக, தையல் கலை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# குளிர்ந்த பாலை பிஸ்கட் விரைவில் உறிஞ்சுவதில்லை!



அணுக்கள் அல்லது மூலக்கூறுகளுக்கிடையே கவர்ச்சி விசையினால் உண்டாகும் பிணைப்பானது, பிஸ்கட்டைப் பொறுத்த வரையில், அதன் துகள்களுக் கிடையில் வலிமை குன்றிக் காணப்படுகின்றது. இதனாலேயே, பிஸ்கட் மென்மையாக இருப்பதுடன், எளிதில் தூளாகியும் விடுகின்றது.

இதற்குக் காரணம்; அந்தத் துகள்களுக்கிடையிலான வெண்டர் வோல் பிணைப்பு, நீரின் தொடர்பினால் சிதைக்கப்பட்டு மிகவும் மிருதுவான தன்மையை அடைந்துவிடுவதேயாகும்.

பாலானது, நீர் மற்றும் பாகுத்தன்மையுடைய புரதம், கொழுப்பு ஆகியவற்றின் கலவையாகும். பிஸ்கட்டைப் பாலில் தோய்த்தவுடன் அதிலுள்ள நீரானது, பிஸ்கட் துகள்களுடன் வினைபுரிந்து பிஸ்கட்டை மிருதுவானதாக்கி விடுகின்றது. அத்துடன், சூடான பாலில் புரதம் மற்றும் கொழுப்பு போன்றவற்றின் பாகுத்தன்மை குறைந்து பிஸ்கட்டும் சூடாகின்ற நிலையில், பால் மிகவும் விரைந்து பிஸ்கட் துகள்களுக் கிடையே பரவுகிறது. இதுவே சூடான பாலை பிஸ்கட் உறிஞ்சிக்கொள்ளும் தன்மையாகும். இவ்வாறான விரைவுத் தன்மை குளிர்ந்த பாலில் இல்லாமல் இருப்பதற்குக் காரணம்; அதிலுள்ள பாகுத்தன்மை குறையாமல் இயல்பு நிலையில் இருப்பதாகும். அதனாலேயே, குளிர்ந்த பாலை பிஸ்கட் விரைவில் உறிஞ்சுவதில்லை.



# மரங்கள் ஏன் உருளை வடிவில் காணப்படுகின்றன?



தாவரம் ஒன்றின் உருவமானது; தனிப்பட்ட உயிரணுவின் அமைப்பு மற்றும் உயிரணுக்கள் ஒருங்கிணைந்து உருவாகும் அமைப்பு ஆகியவற்றைப் பொறுத்து அமைகின்றது. தாவரத்தின் தண்டுப் பகுதியில் இரு குறுகிய குழாய் அமைப்பிலான திசுப் பகுதிகள் உள்ளன. அவை; மரவியம், பட்டையம் என்று அழைக்கப்படுகின்றது. மரவியம், தண்டின் நடுப்பகுதியிலும் பட்டையம், மரவியத்தின் வெளிப்புறத்திலும் அமைந்துள்ளது. மரத்தின் தண்டுப்பகுதி வெளிப்புறமாக பக்கவாட்டில் ஒவ்வொரு அடுக்காக வளர்வதனாலேயே, மரத்தின் தண்டுப்பகுதி உருளை வடிவில் காணப்படுகின்றது.

அத்துடன், மரமொன்றின் தண்டுப்பகுதியானது, பொதுவாக உருளை வடிவில் காணப்பட்டாலும், அனைத்து தாவரங்களும் அவ்வாறு காணப்படமாட்டா. ஏனெனில், புல்வகைகளின் தண்டுகள் முக்கோண வடிவிலும் சில வகை செடிகளின் தண்டுகள் சதுர வடிவிலும் அமைந்திருக்கின்றன. தாவரங்கள் நுண்ணிய உயிரணுக்களால் இருக்கின்றமையால், அவ்வுயிரணுக்கள் கோள வடிவில் அல்லது சுருள் வடிவில் ஒருங்கிணைந்து இருக்கின்றன.



விஜய் Bookvin கிழக்கு பதிப்பகம்

## இணைந்து வழங்கும் கேள்வி-பதில்

# அறிவுத் தேடல்

**"கேள்விகளே அறிவின் திறவுகோல்" என்றார் ஐன்ஸ்டைன்; "ஒரு மனிதனை, அவன் கேட்கும் கேள்விகளால் மதிப்பிடுங்கள்" என்றார் வோல்டேயர்.**

ஆனால், இன்று எம்மில் எத்தனை பேர் கேள்விகளைக் கேட்கத் துணிகின்றோம்? எத்தனை பேர் சிந்திக்கின்றோம்? (பாடப் புத்தகத்தில் இருப்பதைத்தவிர, வேறு எதுவும் தெரியாத 'புத்தகப் புழுக்களாக' மாறி வருகின்றோம்)

இதோ! உங்கள் 'விஜய்'- Bookvin - கிழக்குப் பதிப்பகம் உடன் இணைந்து உங்கள் அறிவுக்கண்ணைத் திறக்க முன்வருகின்றது. விஞ்ஞானம், வரலாறு, புவியியல், மொழியியல், கணிதம், இயற்கை, மனோவியல் மேலும் பல... என்ற ரீதியில் எதில் வேண்டுமானாலும் உங்கள் கேள்விகள் அமையலாம்.

**'கேள்வி கேட்பவன், விடை கிடைக்கும் வரை முட்டாளாக இருக்கின்றான்; கேள்வி கேட்காதவனோ, ஆயுள் முழுவதும் முட்டாளாகவே மரணிக்கின்றான்!'**

ஆகவே, கேளுங்கள்; உங்கள் மூளையைக் குழப்பும் புரியாத புதிர்களுக்கு நாம் விடையளிக்கின்றோம்! உங்களால் உண்மையை மாற்ற முடியாது; ஆனால் உண்மை, உங்களை மாற்றட்டும்!

✱ வாராவாரம், சிறந்த கேள்விகளைக் கேட்கும் இருவருக்கு தலா ரூ.500 மதிப்புடைய நூல்கள் பரிசாக வழங்கப்படும்.

**உங்களது கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

அறிவுத் தேடல்,
'விஜய்'
த.பெ.இல: 2037, கொழும்பு.

அறிவைத் தேட அரிய சந்தர்ப்பம்

சிறந்த நூல்களை எங்கே பெறுவது?

கவலையே வேண்டாம்!
உங்களுக்கு உதவ
'புக்வின்' தனியார் நிறுவனம்
தயாராக உள்ளது!




- உங்களுக்குப் பிடித்த தலைப்புகளில்
- பல்வேறு வகைகளில்
- எளிமையான தமிழில்
- உலகத் தரமான தயாரிப்பில்
- வாங்கக்கூடிய மலிவு விலையில்

நூல்களைப் பெறக்கூடிய ஒரே இடம்:

Bookvin Pvt Ltd
புக்வின் தனியார் நிறுவனம்
கிழக்கு பதிப்பகம்

209 1/1, நீர்கொழும்பு வீதி, வத்தளை,
தொலைபேசி இல: 011-2941234, 071-4441234
தொலைநகல்: 011-2941234 மின்னஞ்சல்: bookwinsrilanka@gmail.com

செப் 18-26 வரை கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (B.M.I.C.H) நடைபெறும் சர்வதேச புத்தகக் கண்காட்சியில் J413 என்ற எமது காட்சிக் கூடத்தில் புக்வின் நூல்களை விசேட விலைக்கழிவுடன் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றாடல்

பெயர்: .......................................... நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

**01) சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.**

1. இலங்கையின் தேசிய விளையாட்டு கரப்பந்தாட்டம். (------)
2. பச்சோந்தி சூழலுக்கு ஏற்றவாறு தனது நிறத்தை மாற்றிக்கொள்ளும். (------)
3. அசுத்தமான நீரைக் குடிப்பதனால் நெருப்புக் காய்ச்சல் உண்டாகும். (------)
4. யூரியா ஓர் இயற்கைப் பசளை ஆகும். (------)
5. 'இஞ்சி' மருந்தாகப் பயன்படும் நிலக்கீழ் தண்டாகும். (------)
6. கடுகு விரைவாக முளைக்கும் வித்தாகும். (------)

**02) பொருத்தமான சொல்லைத் தெரிந்து இடைவெளியில் எழுதுக.**


| மண்புழு | வடிவம் | கியூலெக்ஸ் | துலா | கழுத்துப்பகுதியில் |
|---|---|---|---|---|

1. அணில் தனது பிள்ளையை ................................ கவ்வித் தூக்கிச் செல்லும்.
2. ........................................... மண்ணை வளமாக்கித் தரும்.
3. பாத்திரத்தின் வடிவத்திற்கு ஏற்ப நீரின் ........................................... அமையும்.
4. கிணற்றிலிருந்து நீர் எடுக்க ........................................... பயன்படுகிறது.
5. யானைக்கால் நோயைப் பரப்பும் நுளம்பு ........................................... ஆகும்.

**03) 'A' பகுதியில் உள்ள வரிப்படங்களை அவதானித்து, அவற்றுக்குப் பொருத்தமானதை 'B' பகுதியிலிருந்து தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.**

'A' பகுதி 'B' பகுதி

உதாரணம்:

1.  (5) 1. ஆணியை அறைதல், பிடுங்குதல்.
2.  (--) 2. மரத்தைத் துளையிடுதல்.
3.  (--) 3. சிறு துண்டுகளாக வெட்டுவதற்கு.
4.  (--) 4. சிறிய மீன்களை குறைந்த நீரில் பிடிக்க.
5.  (--) 5. பலகையில் குழி குடைதல்.
6.  (--) 6. சுவரை செங்குத்தாகக் கட்டுவதற்கு.

**04) மிகப்பொருத்தமான விடையின்கீழ்க் கோடிடுக.**

01. கறையான், வண்டுகள் என்பவற்றால் அரிக்கப்படாத தாவரம் எது?
 1. தேக்கு 2. பலா 3. மா 4. தென்னை

02. தண்டுகளை நடுவதன்மூலம் பெற்றுக்கொள்ளும் தாவரம் எது?
 1. தக்காளி 2. கரும்பு 3. வெண்டி 4. பாகல்

03. மூன்று இதழ்களைக்கொண்ட பூ எது?
 1. சூரியகாந்தி 2. மல்லிகை 3. கடதாசிப்பூ 4. நாயுருவி

04. பச்சை நிறமில்லாத ஒரு தாவரம் எது?
 1. காளான் 2. ஆடாதோடை 3. வாழை 4. நாயுருவி

05. மஞ்சள் நிறப் பூ எது?
 1. பிறைப்பூ 2. பூவரசம்பூ 3. அத்திப்பூ 4. கத்தரிப்பூ

06. நத்தையின் முட்டை என்ன நிறம்?
 1. இளம்பச்சை 2. நீலம் 3. மஞ்சள் 4. வெள்ளை

07. 
இவ்வீதிச் சமிக்ஞை எதை உணர்த்துகின்றது?
 1. முன்னால் இடப்பக்கம் திரும்பு
 2. இடப்பக்கம் திரும்பத் தடை
 3. முன்னால் வலப்பக்கம் திரும்பு
 4. வலப்பக்கம் திரும்பத் தடை

08. உடையில் பட்ட தாரை நீக்கப் பொருத்தமான திரவம் எது?
 1. தேங்காய் எண்ணெய் 2. மண்ணெண்ணெய்
 3. வினாகிரி 4. பெற்றோல்

09. மிகவும் விரைவாக ஆவியாகக்கூடிய திரவம் எது?
 1. நீர் 2. மண்ணெண்ணெய்
 3. தேங்காய் எண்ணெய் 4. ஸ்பிரிட் தொற்றுநீக்கி

10. சுத்தமான நீரின் பண்பாக அமையாதது எது?
 1. மணமில்லை 2. பாரமில்லை 3. சுவை இல்லை 4. நிறமில்லை




11. பாதசாரிகள் பின்பற்ற வேண்டிய விதிமுறை அல்லாதது எது?
 1. வீதியின் வலப்பக்கமாகச் செல்லல்
 2. நடைபாதையினால் ஒதுங்கிச் செல்லல்
 3. வீதியின் இடப்பக்கமாகச் செல்லல்
 4. பாதசாரிக் கடவையால் பாதையைக் கடத்தல்

**05) பின்வரும் சிங்களத் தொடர்களின் தமிழ்க் கருத்தினைத் தருக.**

1. ഉகுரு(த்)துமா பந்தியே இன்னவா.

 ..........................................................................................

2. மே மஉகே க(ட்)ட.


 ..........................................................................................

3. ஒbபே தாத்தாஉகே நம மொகக்த?

 ..........................................................................................

**06) பின்வரும் தாவரங்களின் பெயர்களை அடைப்புக்குள் இருந்து தெரிந்து எழுதுக.**

| ரம்பை | நாயுருவி | கற்பூரவள்ளி | பிரண்டை |
|---|---|---|---|

1.  2.  3.  4. 

...................... ...................... ...................... ......................

**07) பின்வரும் வினாக்களுக்கு சரியான விடை தருக.**

1. நீரின் மூன்று நிலைகளும் எவை?
 1. ...................... 2. ...................... 3. ......................
2. இயற்கைப் பசளை 2 தருக.
 1. .................................... 2. ....................................
3. தேசிய கீதத்தை தமிழில் மொழிபெயர்த்தவர் யார்?
 ..........................................................................................
4. அசுத்த நீரைக் குடிப்பதனால் ஏற்படக்கூடிய நோய்கள் 2 தருக.
 1. .................................... 2. ....................................



**08) பின்வரும் அறிவுறுத்தலை வாசித்து அதனைப் படமாக வரைந்து காட்டுக.**

| உலர் மின்கலம் ஒன்றையும் இரண்டு வயர்துண்டுகளையும் பயன்படுத்தி ஒரு மின்குமிழை ஒளிரச் செய்க. | ➡ | |
|---|---|---|

**விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்**

## கணிதம் - விடைகள்

*(செப்டெம்பர் 12 ஆம் திகதி பிரசுரமானவை)*

01) 2
02) 2
03) 1
04) 3
05) 2
06) 2
07) 2
08) 2
09) 3
10) 2
11) 784
12) 8m 40cm
13) 7 150
14) 7 100
15) 673
16) 3 50
17) 3 750
18) 3 600
19) 14
20) 4
21) இட்லி
22) 
23) 
24) 4250 ml
25) 2
26) 6
27) 1.15 மணி
28) ரூபாய் 100.00
29) ரூபாய் 11.50
30) ரூபாய் 95.25
31) 3m 40cm
32) 8m 22cm
33) 2m 70cm
34) 7kg 600g
35) 3kg 500g
36) 8l 400ml
37) 2l 950ml
38) 522 பென்சில்கள்
39) ரூபாய் 516.00
40) 104 தோடம்பழங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஜந்தா ஓவியங்கள்

அஜந்தா குகை ஓவியங்கள் உலகப் பிரசித்திபெற்றவையாகும். இங்குள்ள ஓவியங்கள் 2 ஆம் நூற்றாண்டு முதல் 7 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதிக்குரியவை எனக் கூறப்படுகின்றது. அஜந்தா குகையானது, இந்தியாவில் ஹைதராபாத்தில் அமைந்துள்ளது. பௌத்த மதத்தினை தழுவியே இந்த ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. பௌத்த மதத்தில் கற்பிக்கப்படும் தானம், ஒழுக்கம்,தியானம் ஆகிய பண்புகள் இந்த ஓவியங்களில் பிரதிபலிக்கப்படுகின்றன.

புத்தபிரானின் பிறப்பு, துறவுநிலை போன்ற ஓவியங்கள் உட்பட, போதி வழிபாடு, மார யுத்தம், கிம்புல்வத்புரம் மற்றும் கபிலவஸ்து ஆகிய இடங்களுக்கான புத்தரின் விஜயம் என்பனவும் ஓவியங்களாக சித்தரிக்கப்பட்டுள்ளன.


அத்துடன், விலங்குகளின் உருவங்கள், மனித உருவங்கள் என்பனவும் பலதரப்பட்ட பாணிகளைப் பயன்படுத்தி இங்கு வரையப்பட்டுள்ளன. பெண்களின் உருவங்கள் மிகவும் நளினத்தன்மை கொண்டவையாகவும் பெண்களின் நாணம் இயல்பு நிலையுடன் யதார்த்தபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. முப்பரிமாண முறை மற்றும் ஓவியக்கலை நுட்பங்களான பிரெஸ்கோ ஓவிய முறை எனப்படும் ஈரலிப்புத் தன்மை கொண்ட நுட்பமும் டெம்பரா ஓவியமுறை எனப்படும் உலர் தன்மைகொண்ட நுட்பமும் ஓவியங்களை வரைவதில் கையாளப்பட்டுள்ளன. ஓவியங்களை வரைவதற்கு கறுப்பு, வெள்ளை, மஞ்சள், நீலம், கபிலம், சிவப்பு ஆகிய நிறங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.


அரண்மனையொன்றின் உட்புறக் காட்சியை வெளிப்படுத்தும் ஓவியமொன்று.


அப்சராக்கள்.


அஜந்தா குகைத்தொடர் (இது குதிரை லாடம் போன்ற வடிவத்தினைக் கொண்டது)


பத்மபாணி போதிசத்வ உருவம்.


வஜிரபாணி போதிசத்வ உருவம்.


கூரையில் காணக்கூடியதாக உள்ள அலங்கார வேலைப்பாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'றொய்டர்ஸ்' செய்திச்சேவை அண்மையில் வேற்றுக்கிரகவாசிகள் குறித்து மக்கள் கருத்துக்கணிப்பு ஒன்றினை நடாத்தியிருந்தது. இந்தக் கருத்துக்கணிப்பில் 22 நாடுகளைச் சேர்ந்த 23 ஆயிரம் பேர் பங்குபற்றியிருந்தனர்.இதன்போது, வேற்றுக்கிரகவாசிகள் மனிதர்களைப் போன்று வேடமிட்டு மனிதர்களுடன் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர் என்று இந்த கருத்துக்கணிப்பில் கலந்துகொண்ட அனைவருமே தெரிவித்திருந்தனர். ஏன் இப்படி அனைவரும் ஒரேமாதிரியாகச் சிந்திக்கின்றனர்? என்று ஆராய்ந்து பார்த்ததில், காலம் காலமாக பரப்பப்பட்டு வருகின்ற பல்வேறு கட்டுக்கதைகளால் மக்கள் முட்டாள்களாக்கப்பட்டுள்ளனர் என்பது புலனாகியுள்ளது.

# வேற்றுக்க
# கட்டுக்

## சந்திரனில் உயிரினங்கள்

1835 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி 'த நியூயோர்க் சன்' என்ற அமெரிக்க செய்திப் பத்திரிகையில் 'வியப்பூட்டும் கண்டுபிடிப்பு' என்ற தலைப்பில் கட்டுரைத்தொடர் ஒன்று வெளியாகியிருந்தது. பிரித்தானிய வானியல் அறிஞரான ஜோன் ஹேர்ஷலின் கண்டுபிடிப்பொன்று பற்றியே அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. சந்திரனின் மேற்புறப்புக் காட்சிகளை இந்த தொலைக்காட்டி மிகவும் துல்லியமாக வெளிப்படுத்தியிருந்ததாக அந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

42 ஆயிரம் மடங்கு பெரிதுபடுத்திப் பார்க்கக்கூடியவாறான வில்லையொன்று குறித்த தொலைக்காட்டியில் பொருத்தப்பட்டிருந்ததாகவும் அதனூடாக, சந்திரனின் மேற்பகுதியில் வாழும் சிறிய பூச்சிகளையும் தெளிவாகப் பார்க்க முடிந்ததாகவும் அந்தக் கட்டுரையில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஹேர்ஷலின் உதவியாளர் என்று தன்னை இனங்காட்டிய ரிச்சர்ட் எடம் லொக் என்ற எழுத்தாளரே, இந்தக் கட்டுரையைப் பிரசுரித்திருந்தார்.

இந்தக் கட்டுரைத் தொடரின் இரண்டாம் பாகம் மறுநாள் பிரசுரமாகியிருந்தது. சந்திரனின் மேற்பரப்பில் பூச்சிகள், பறவைகள், பைசன் மாடுகள் போன்ற சில உயிரினங்களும் தென்பட்டதாக அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. மூன்றாவது நாள் மேலும் வியப்பான ஒரு தகவலுடன் அந்தக் கட்டுரையின் மற்றுமொரு பாகம் பிரசுரமாகியிருந்தது. சிறிய வகை வரிக்குதிரைகளும் குமுறிக்கொண்டிருக்கும் எரிமலைகளும் அங்கு உள்ளதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன், 'பீவர்' எனப்படும் உயிரினம் சந்திரனின் மேற்பகுதியில் சிக்கல் மிகுந்த விசாலமான கட்டடங்களை நிர்மாணித்துள்ளதாக நான்காவது நாள் பிரசுரமான கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.





தற்காலத்தில் மேற்குறித்த விடயங்கள் பொய்யென எமக்குத் தோன்றினாலும், 1835 ஆம் ஆண்டில், தொழில்நுட்ப முன்னேற்றம், விஞ்ஞான வளர்ச்சி எதுவும் இருக்காததால், அப்போது பத்திரிகையில் வெளியாகியிருந்த அந்த தகவல்களை மக்கள் பெரிதும் நம்பியதோடு, பெரும் அதிர்ச்சி நிலைக்கும் உள்ளாகினர். தொடர்ந்து ஐந்தாவது நாளில் 'சந்திரனில் உயிரினங்கள்' என்ற தலைப்பில் மற்றொரு தொடர் கட்டுரையொன்று அப்பத்திரிகையில் வெளியாகியது. அன்றைய காலப்பகுதியில் குறித்த பத்திரிகையின் விற்பனையும் சூடு பிடித்திருந்தது. அன்று லண்டன் டைம்ஸ் பத்திரிகைதான் உலகின் மிகவும் பிரபல்யம் பெற்ற பத்திரிகையாகவும் விற்பனை அதிகம் உள்ள பத்திரிகையாகவும் இருந்தது. எனினும், 'சந்திரனில் உயிரினங்கள்' எனும் தலைப்பிலான புதிய கட்டுரைத் தொடரினால் 'த நியூயோர்க் சன்' பத்திரிகை 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகையைவிட பிரபல்யம் பெறத் தொடங்கியது.

இந்தக் கட்டுரைத் தொடரினை வாசகர்கள் பேரார்வத்துடன் எதிர்பார்த்திருந்தனர். இதனால், ஒவ்வொரு முறையும் வாசகர்களை ஏமாற்றாத வகையில், பத்திரிகையில் கட்டுரை வெளியாகிக் கொண்டிருந்தது. அந்த கட்டுரைத் தொடரில் சந்திரனில் வாழும் இறக்கைகள் கொண்ட மனிதர்கள் பற்றியும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இவற்றின் இறக்கைகள் வெளவால்களின் இறக்கைகளைப் போன்றவை என்றும் 'வெஸ்பர்ட்டிலோ ஹோமோ' என்ற விஞ்ஞானப் பெயரில் இவை அழைக்கப்படுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. 'வெஸ்பர்ட்டிலோ ஹோமோ' என்பதன் அர்த்தம் 'வெளவால் மனிதன்' என்பதாகும். அதன் பின்பு மேலும் இரண்டு கட்டுரைகள் வெளியாகின. அதில் வெளவால் மனிதர்களினால் சந்திரனில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நீலநிறக் கல் தேவாலயம் குறித்தும் குறிப்பிடப்பட்டிருந்தது.

பிற்காலத்தில், பத்திரிகையில் வெளியான கட்டுரைகளைத் தொகுத்து சிறிய நூல் ஒன்றை ரிச்சர்ட் எடம் லொக் வெளியிட்டார். முதல் மாதத்திலேயே சுமார் 60 ஆயிரம் நூல்கள் விற்பனையாகின. ஆயினும், பத்திரிகையில் எழுதிய விடயங்கள் பொய்யானவை என்றும் அவை தமது கற்பனையின் விளைவால் உருவானவை என்றும் ரிச்சர்ட் எடம் லொக் அப்போதுதான் உலகத்திற்கு வெளிப்படுத்தினார்.

பத்திரிகையின் விற்பனையை அதிகரித்து-பிரபலத்தினைப் பெறவே அவர் இவ்வாறு எழுதியிருந்தார். எனினும், அவரது பொய்கள் வெற்றியளித்ததோடு, குறிக்கோளும் நிறைவேறியது. ஜோன் ஹேர்ஷலுடன், ரிச்சர்ட் எடம் லொக் எந்தத் தொடர்பையும் கொண்டவரல்லர் என்று பின்னர் தெரிவிக்கப்பட்டது. தன்னையும் தனது தொலைக்காட்டியையும் தொடர்புபடுத்தி அமெரிக்க எழுத்தாளர் ஒருவரினால் பொய்யான தொடர் கட்டுரையொன்று எழுதப்பட்டு வந்துள்ளது என்பதனை விஞ்ஞானி ஜோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## செவ்வாய்க் கிரகத்தில் இருந்து பூமிக்கு வந்த குரங்குகள்

1940 களின் இறுதியிலும் 1950 களின் ஆரம்பத்திலும் பறக்கும் தட்டுக்கள் பலவற்றைப் பார்த்ததாக அமெரிக்காவில் இருந்து பல தகவல்கள் வெளியாகியிருந்தன. ஆனால், அக்காலகட்டத்தில் எவரும் வேற்றுக்கிரகவாசிகளைப் பார்த்திருக்கவில்லை. எனினும், 1953 ஆம் ஆண்டு ஜூலை 8 ஆம் திகதி அதிகாலைப் பொழுதில் ஜோர்ஜியாவின் பின்தங்கிய பிரதேசமொன்றில் டிரக் வண்டியில் மூன்று இளைஞர்கள் பயணித்துக்கொண்டிருந்தபோது, வியப்பூட்டும் வகையிலான விலங்குகள் சிலவற்றைப் பார்த்ததாகவும் அதில் ஒரு விலங்கு டிரக் வண்டியில் மோதி இறந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தப் புதுமையான விலங்கின் உடலில் ரோமங்கள் இல்லை. இதற்கு முன்னர் ஒருபோதும் இவ்வாறானதொரு விலங்கினை அவர்கள் பார்த்ததே இல்லை. இதனை அடுத்து வேற்றுக்கிரகத்தினைச் சேர்ந்த விலங்கு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகின. பின்னர் அட்லாண்டாவின் எமிரோய் பல்கலைக்கழகத்தின் உடற்கூற்றியல் விஞ்ஞானியான பேராசிரியர் மேரியன் ஹின்ஸ், இந்த விலங்கினம் பற்றிய ஆய்வுகளை நடத்தினார். அதனை அடுத்து, அது வேற்றுக்கிரகவாசியன்று; மாறாக, ரோமங்கள் மழிக்கப்பட்டு-வால் வெட்டி அகற்றப்பட்ட குரங்கு என்பது உறுதிசெய்யப்பட்டது. ஆக, வோட்டர்ஸ் பொய் கூறியிருப்பதாகவும் இறந்த குரங்கொன்றை எடுத்து வந்து அதனை வேற்றுக்கிரகவாசி என தெரியப்படுத்தி கட்டுக்கதையைப் பரப்பியுள்ளார் எனவும் பின்னர் புலனாகியது. அந்தக் குற்றத்திற்காக, வோட்டர்ஸ் அபராதப் பணமும் செலுத்த நேரிட்டது.


செவ்வாய்க் கிரகத்தில் இருந்து வந்ததாகக் கருதப்பட்ட குரங்கு

# கிரகவாசிகள் பற்றிய கதைகள் சில...



ஹேர்ஷல் அந்தப் புத்தகத்தை வாசித்த பின்னரே தெரிந்துகொண்டார்.

### லெட்வியாவில் எரிகல்

2009 ஒக்டோபர் மாதத்தின் ஓர் அமைதியான ஞாயிற்றுப் பொழுதில் லெட்வியாவில் திரைப்படம் ஒன்றிற்கான படப்பிடிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மூன்று பல்கலைக்கழக மாணவர்களுக்கு வான்பரப்பில் பேரிடிச் சத்தமொன்று கேட்டது. அப்போது இவர்களின் கையில் கெமரா இருந்ததனால், எரிகல் விழுந்த இடத்தினை நோக்கிச் சென்று படம் பிடித்தனர். பின்னர், இதுபற்றி தீயணைப்புப் படையினருக்கு அவர்கள் அறிவித்தனர். அதன்பின்பு விசாரணைகள் நடத்தப்பட்டன.

மறுநாள் காலை லெட்வியா பல்கலைக்கழகத்தின் பிரதான வானியல் விஞ்ஞானியான கலாநிதி இல்கோனிஸ் வில்க்ஸ், குறித்த எரிகல் விழுந்த இடத்திற்கு வந்தார். அங்கு வில்க்ஸுக்கு குறித்த சம்பவம் தொடர்பில் சந்தேகங்கள் எழ ஆரம்பித்தன. காரணம்: எரிகல் விழுந்த பகுதியைச் சூழ மண், தூசுகள் சிதறி இருக்கவில்லை. குறிப்பாக, எரிகலொன்று தரையில் விழுந்தால், சுற்றுப்புறத்தில் இருக்கும் அனைத்தும் நாசமாகிவிடும். எனினும், அந்த இடத்தில் முளைத்திருந்த புற்கள்கூட கருகியிருக்கவில்லை. அத்துடன், அப்பகுதியை மேலும் ஆராய்ந்தபோது, விஞ்ஞானிகளுக்கு அங்கிருந்து அலுமினியத் துகள்கள் கிடைத்தன. அவை வான வெடிகள் கொளுத்தப்பட்ட பின்னர் கிடைக்கும் மீதங்கள் போன்றிருந்தது. அதேவேளை, மண் அள்ளும் உபகரணமான ஷவலின் அடையாளங்களும் அங்கு அவதானிக்கப்பட்டுள்ளன. ஆக, இது திட்டமிட்ட ஒரு நிகழ்வு என கலாநிதி வில்க்ஸ் தெரிவித்தார்.

அன்றைய தினம் மாலை லெட்வியாவில் அமைந்துள்ள 'டெல் 2' என்ற ஸ்வீடன் தொலைத்தொடர்பு நிறுவனம், தமது செல்லிடத் தொலைபேசி பிரச்சார நடவடிக்கைகளின்போது இச்சம்பவம்



நிகழ்ந்ததாக தெரிவித்திருந்தது. எனினும், இதனூடாக, அவர்களுக்கு எதிர்பார்த்த நலன்கள் கிடைக்கவில்லை. இதற்காக அந்நிறுவனம் அபராதப் பணம் செலுத்த வேண்டி நேர்ந்தது.

### வெளிப்படாத உண்மை

பிரபஞ்சத்தில் உயிரினங்களைக் கொண்ட வேற்றுக்கிரங்கள் இருப்பதாக சில விஞ்ஞானிகள் கருதுகின்றனர். எமது ஞாயிற்றுத்தொகுதியினைப் போன்று பல ஆயிரக் கணக்கான ஞாயிற்றுத்தொகுதிகள் பிரபஞ்சத்தில் இருப்பதாகவே அவர்கள் மேலும் கூறுகின்றனர். அத்துடன், பல நூற்றாண்டுகளாக, வானில் மர்மமான ஆச்சரியம் தரும் ஒளிகள் தென்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. வேற்றுக்கிரகத்தில் இருந்து வரும் விமானங்கள் மற்றும் பறக்கும் தட்டுக்கள் பூமியில் தரை இறங்கி, அதிலிருந்து வேற்றுக்கிரகவாசிகள் வருகை தருவதாகவும் கூறப்படுகின்றது. எனினும், பிற்காலத்தில் இவற்றில் பெரும்பாலானவை பறக்கும் தட்டுக்கள் அல்ல என்று ஊர்ஜிதப் படுத்தப்பட்டபோதும், இன்னும் சிலவற்றைப் பற்றி இதுவரை எந்தவொரு தகவலும் வெளியிட முடியாமலேயே உள்ளது.

(இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடற்கரை

நீண்ட கடலின் கரையினிலே
நிறைந்த வெள்ளை மணற்பரப்பிலே
வேண்டும் கதைகள் பேசிடலாம்
விரும்பும் காற்றை நுகர்ந்திடலாம்!

சிறுவர் பலராய்ச் சேர்ந்திடலாம்
சிரித்துச் சிரித்தே ஆடிடலாம்
சறுக்கி விழுந்து எழுந்திடலாம்
வெள்ளைச் சோகி சேர்த்திடலாம்!

மேற்கில் கதிரோன் சரிந்திடவே
மெதுவாய் வானம் சிவந்திடுமே
சீற்றம் மிகுந்த அலையெழுந்து
திரண்டு கரையை மோதிடுமே!

பாத்திமா பஸூஹா,
அக்குறனை பா.மு.வித்.,
அக்குறனை.

# உழைப்பே செல்வம்



உழவர் ஒருவருக்கு மூன்று மகன்கள் இருந்தனர். மூவருமே மகா சோம்பேறிகள். ஆண்டுகள் பல ஓடின. முதுமை அடைந்த உழவர் இறக்கும் நிலையில் இருந்தார். தன் மகன்களைப் பார்த்து "நானும் உங்களைத் திருத்த எவ்வளவோ முயற்சிகளைச் செய்து விட்டேன். நீங்களும் சோம்பேறிகளாகவே இருக்கின்றீர்கள். நான் இப்பொழுது இறக்கும் தருவாயில் இருக்கின்றேன். எமது நிலத்தில் ஒரு புதையல் உள்ளது. அதை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டு சில நாட்களின் பின் இறந்துவிட்டார். புதையலை எடுக்கும் ஆசையில் உழவனின் மகன்கள் நிலத்தைத் தோண்டினார்கள். ஆனால், ஒன்றுமே அங்கு இருக்கவில்லை. கற்பாறைகளுக்கு அடியில் பார்த்தார்கள். அங்கேயும் இருக்கவில்லை.


மூன்று மகன்களும் தந்தையின் நண்பரான ஆறுமுகத்தின் வீட்டிற்கு சென்று நடந்ததைச் கூறினார்கள். அதற்கு அவர் நிலத்தைத்தான் தோண்டி விட்டீர்கள். நெல் விதைக்கும் காலம் இது. அதனால், அதில் நெல்மணிகளை விதையுங்கள். உங்களுக்குப் பயன் கிடைக்கும் என்றார். மூவரும் வேண்டாவெறுப்புடன் நெல்லை விதைத்தார்கள். அந்த ஆண்டில் தவறாமல் மழை பெய்தது. ஊரிலேயே அவர்கள் நிலத்தில்தான் நல்ல விளைச்சல். அறுவடை செய்த அவர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்கள். அப்பொழுதுதான் மூவருக்கும் தந்தை சொன்ன புதையலின் பொருள் புரிந்தது.

எம்.எம்.முஹம்மட், அஸ்ஹர் கல்., அக்குறனை.




# தாவரங்களின் ஆவியுயிர்ப்பு

தாவரத்தின் காற்றிற்குரிய மேற்பரப்புகளிலிருந்து நீரானது ஆவிநிலையில் வெளியேறும் செயன்முறையே 'ஆவியுயிர்ப்பு' எனப்படுகின்றது. ஆவியுயிர்ப்பு



பிரதானமாக இலைகளிலுள்ள இலை வாய்களினூடாக நடைபெறும்.

தாவர இலையை நோக்கிவரும் நீரின் ஒரு பகுதி அங்குள்ள கலங்களின் கலச் சுவரின் ஊடாகவும் காற்றிடை வெளிக்குப் பரவலடையும். இந்த நீரானது, இலைவாய்களின் ஊடாகவும் ஆவிநிலையில் வெளியேறும். மேலும், மேற்புற மேற்றோலின் ஊடாகவும் தண்டிலுள்ள பட்டை வாய்களின் ஊடாகவும் குறிப்பிட்டளவு ஆவியுயிர்ப்பு நடைபெறும். ஆவியுயிர்ப்பு நடைபெறும் தாவரப்பகுதிக்கு அமைய பின்வருமாறு வகைப்படுத்திக் காட்டலாம்.

1. இலை வாய் ஆவியுயிர்ப்பு
2. புறத்தோலுக்குரிய ஆவியுயிர்ப்பு
3. பட்டை வாய் ஆவியுயிர்ப்பு

M. நளீம்,
மார்கஷ் அந்நூர் கலாபீடம்,
ஹிஜ்ரா நகர்,
வாழைச்சேனை.

# கண்ணீர் எவ்வாறு சுரக்கின்றது?



எமது கண்கள் எப்போதும் ஈரப்பதனாக இருக்க வேண்டும். இதற்காக கண்களின் மேற்பரப்பில் கண்ணீர்ச் சுரப்பிகள் உள்ளன.

இந்த சுரப்பிகளில் சுரக்கும் நீர், நாம் இமைக்கும்போது கண்ணின் அனைத்துப் பகுதிகளுக்கும் பரவிக் கண்ணை ஈரமாக வைக்கின்றது.

அதிகளவிலான இன்ப, துன்பங்களுக்கு நாம் ஆளாகும்போது அல்லது வெங்காய வாசனையை நுகரும்போது இந்தக் கண்ணீர்ச் சுரப்பிகள் தூண்டப்படுகின்றன. இதன் காரணமாக, வழக்கத்தைவிட அதிகமாக நீர் உற்பத்தியாகின்றன.

இவ்வாறு உற்பத்தியாகும் நீர் இமையோரத்தில் தேங்கி கண்ணீர்த்துளிகளாக வெளியேறுகின்றன.

அளவுக்கதிகமாக கண்ணீர் வெளியேறுகின்றபோது, மூக்குத்துவாரங்கள் வழியாகவும் கண்ணீர் வரும். கண்ணுக்கும் மூக்குத் துவாரத்துக்கும் தொடர்பிருப்பதே இதற்குக் காரணமாகும். இந்தக் கண்ணீரில் கிருமிநாசினிகள் இருப்பதனாலேயே கண்கள் எப்போதும் தூய்மையாக இருக்கின்றன.

எம்.எம்.பயாஸ்,
மார்கஷ் அந்-நூர் அ.பாட.,
நாவலப்பிட்டி

# மருத்துவ மேதைகள்

| | |
|---|---|
| 1. ரொனால்ட் ராஸ் | - மலேரியாவுக்கான காரணத்தைக் கண்டுபிடித்தவர். |
| 2. ஹிப்போக்ரடிஸ் | - நவீன மருத்துவத்தின் தந்தை. |
| 3. மோர்ட்டோன் | - மயக்க மருந்து முறையைக் கண்டுபிடித்தவர். |
| 4. ஜோஸெப் லிஸ்டர் | - பக்றீரிய தடை மருந்தைக் கண்டுபிடித்தார். |
| 5. வில்லியம் ஹார்வே | - இதயநோய் தீர்வுக்கு முன்னோடி. |
| 6. ரொபர்ட் ஹுக் | - நுண்ணுயிரியலின் தந்தை. |
| 7. விளாடிமீர் ஹொப்கின் | - தடுப்பு மருந்து கண்டுபிடிப்பாளர். |
| 8. ஜேம்ஸ் ட்யூமே வாட்சன் | - வைரஸ் பற்றிய ஆய்வாளர். |
| 9. பிரெடெரிக் பொண்டிங் | - இன்சுலினைக் கண்டுபிடித்தவர். |

எஸ்.பிரியா, வவுனியா.

# பொது அறிவு

- முதலையின் அடிவயிற்றுப்பகுதியின் தோலில் இருந்தே குண்டு துளைக்காத உடை தயாரிக்கப்படுகின்றது.
- இரண்டு தேசிய கீதங்களைக் கொண்ட நாடு அவுஸ்திரேலியாவாகும்.
- இங்கிலாந்து நாட்டின் தேசிய சின்னம் ரோஜா.
- இரவு வேளைகளிலும் ஒட்சிசனை வெளிப்படுத்தும் தாவரம் துளசியும் அரச மரமும்தான்.
- 93 நாடுகளில் ஒரே நேரத்தில் விற்பனையாகி புத்தக உலகில் சாதனை படைத்த 'ஹெரி பொட்டர்' புத்தகத்தை எழுதியவர் இங்கிலாந்தின் பெண் எழுத்தாளரான ஜே.கே.ரோலிங் ஆவார்.

J.M. நிப்ராஸ்,
அறபா மு.வித்., தவுகல,
ஹந்தெஸ்ஸ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக 1



## பொருத்தமான ஒலி மரபுச்சொல்லுடன் இணைக்க 5

| (அ) | (ஆ) |
|---|---|
| 1. கழுதை | 1. உறுமும் |
| 2. புலி | 2. கீச்சிடும் |
| 3. வண்டு | 3. கத்தும் |
| 4. அணில் | 4. கனைக்கும் |
| 5. குதிரை | 5. இரையும் |

## சொற்களை ஒழுங்குபடுத்தி சரியான வாக்கியம் அமைக்க 4

1. முயலொன்று/ஓடியது/இருந்து/பற்றைக்குள்
   ..............................................
2. குறுக்கே/அணை/கட்டப்பட்டது/நதிக்குக்
   ..............................................
3. மன்னரை/பாடினார்/புகழ்ந்து/புலவர்
   ..............................................
4. மக்களுக்கு/வெள்ளத்தால்/நிவாரண/உதவி/பாதிக்கப்பட்ட/வழங்கப்பட்டது
   ..............................................






தயாரிப்பு - ஸாரா

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2012.09.26 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 383
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


## அறிவுக்கு விருந்து - 380 விடைகள்


போட்டி: 01



போட்டி: 03




போட்டி: 02



போட்டி: 04

சனி, சதை, சதையி, சகுனி, பகு, பனி, பயிர், பவனி, குனி, தேவர், தேர், தேவதை, தை, வகு, வதை.

போட்டி: 05

| | | | |
|---|---|---|---|
| 1. உயர்வு | - தாழ்வு | 4. கனவு | - நனவு |
| 2. சூடு | - குளிர் | 5. மேடு | - பள்ளம் |
| 3. துரிதம் | - தாமதம் | | |

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 380 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
**எஃப்.சயனப், கிரிவல்லாப்பிடிய, இறம்புக்கனை.**

**போட்டி: 02**
**கு.ஆரோகணன், தோணிக்கல், வவுனியா.**

**போட்டி: 03**
**எஸ்.கஸ்னுஜா, நியூஹம் வீதி, கொட்டாஞ்சேனை.**

**போட்டி: 04**
**எஸ்.காவின், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.**

**போட்டி: 05**
***சுஜைத் அஹமட், அல்-பாத்திமிய்யா வீதி, அக்கரைப்பற்று-11.***

**பாராட்டுப் பெறுவோர்:**

* ஜெ.யுனெஸ்ரன், மன்னார்.
* எஃப்.மாஜிதா, ஹேகொட.
* எஃப். அம்னா, சுங்காவில.
* எம்.சுதாகரன், வத்தகடை.
* எம்.பஹீம், நாபாவளை.
* பல்ஸின் நஸீம், தர்கா நகர்.
* எம்.நுஸ்ஜி, கொடவத்த.
* ஜே.கிஷோபி, கல்முனை-02.
* எம்.அயாஷ், பேருவளை.
* எஸ்.ரமணி, தலவாக்கலை.

## அதிக விற்றமின்கள் அடங்கியுள்ள பழங்கள்



மாம்பழம், பப்பாளி, தக்காளி, வாழைப் பழம், கொய்யா போன்றவை அதிக விற்றமின்கள் அடங்கியுள்ள பழங்களாகும்.


இவற்றில் ஏனைய பழங்களில் இருப்பதை விட அதிகளவில் விற்றமின் A, விற்றமின் $B_1$, விற்றமின் $B_2$, விற்றமின் $B_6$, விற்றமின் $B_9$ (ஃபோலிக் அமிலம்), விற்றமின் C என்பன அடங்கியுள்ளன.

## குருதி ஓட்டம் இல்லாத பகுதிகள்





நமது உடலில் புறத்தோல் அதாவது தோலின் மேற் பகுதி, நகம், ரோமம், விழிவெண்படலம், பற்களின் எனாமல் உறை மற்றும் எலும்பின் வெளிப்பகுதி என்பனவற்றில் குருதி ஓட்டம் காணப்படுவதில்லை!

## எத்தனை உள்ளன? 2




## கூட்டுக 3




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



ஹெம்மாதகம-பள்ளிப்போருவையைச் சேர்ந்த ஸவாஹிர்-நிஸ்பா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா உமைரா, 16.09.2012 அன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



கடுகஹவத்தை-தெவனகலயைச் சேர்ந்த நவ்ஸில்-ஷிஹானா தம்பதியரின் செல்வப் புதல்வன் முஹம்மத் இஷ்ஃபாக், 19.09.2012 ஆகிய இன்று தனது ஆறாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சீர்கல்வி பெற்று, சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: நிரோஷா)

★★★★



மடவளை பஸார்-தல்தடியாவத்தையைச் சேர்ந்த முஹம்மட்-பாஹிமா தம்பதியரின் செல்வப் புதல்வன் முஜீர், 20.09.2012 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள் பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: பர்ஸானா பேகம்)

★★★★



தும்பறையைச் சேர்ந்த விஜய்-மகாலெச்சிமி தம்பதியரின் செல்வப் புதல்வி வி.தமயந்தி, 23.09.2012 அன்று தனது ஒன்பதாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் ஸ்ரீ முத்துமாரி அம்மன் அருள்பெற்று, பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.

# பொலன்னறுவைக் கால ஓவியங்கள்

ஓவியம் வரைவோம் - 120
ஓவியக் கலைச்சுடர் எஸ்.எல்.எம்.மஹ்ரூஃப்



திவங்க ஆலயம்

பொலன்னறுவைக் காலமானது கி.பி. 10-13 ஆம் நூற்றாண்டு வரை நிலவியது. இக்காலத்தில் இங்கு இரண்டு கலாசாரங்கள் நிலவியமையால், வேறுபட்ட இரண்டு கலை, கலாசார அம்சங்களைக் காணலாம். அவை பௌத்த சமயக் கலைகள், இந்து சமயக் கலைகள் என்பனவாகும். சோழ மன்னர்கள் இந்துக் கலைகளையும் சிங்கள மன்னர்கள் பௌத்த சமயக் கலைகளையும் வளர்த்தனர்.


### பொலன்னறுவைக்கால ஓவியங்கள் காணப்படும் முக்கியமான இடங்கள்

1. திவங்க ஆலயம்
2. கல்விகாரை
3. லங்காதிலக விகாரை
4. திம்புலாகல கற்குகை
5. 2 ஆம், 3 ஆம் இலக்க சிவதேவாலயங்கள்

**1. திவங்க ஆலயம்:** திவங்க ஆலயமானது, 1 ஆம் பராக்கிரமபாகு (1153-1186) காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டது.பின்னர் 2 ஆம் பராக்கிரமபாகு (1236-1270) காலப்பகுதியில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. திவங்க ஆலயத்தைக் கண்டறிந்து அறிமுகப்படுத்தியவர் சிவில் சேவையாளர் எம்.எஸ்.பெரோஸ் என்பவராவார். இந்த திவங்க ஆலயம் 133 அடி நீளமும் 68 அடி அகலமும் 70 அடி உயரமும் கொண்டது. இங்குள்ள ஓவியங்கள் பொலன்னறுவை, கண்டி ஆகிய காலங்களில் வரையப்பட்டவையாகும். இங்குள்ள ஓவியங்களை மண்டபத்தின் உட்பகுதியிலும் சிலை மனையிலும் விறாந்தைப்பகுதியிலும் காணலாம். இந்த ஓவியங்கள் சுதை உலர்ந்த (டெம்பரா) சுவரில் வரையப்பட்டுள்ளது.



திவங்க ஆலயத்தில் உள்ள ஓவியங்கள் சில




கல்விகாரை ஓவியம் ஒன்று

**2. கல்விகாரை ஓவியங்கள்:** கல்விகாரையின், வித்தியாதாரக் குகையில் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இங்கு பிரம்ம முனிவரின் ஓவியம் காணப்படுகின்றது.சாமரை வீசும் உருவமும் வரையப்பட்டுள்ளது. இங்கு காணப்பட்ட பெருமளவிலான ஓவியங்கள் அழிந்துபோயுள்ளன. எஞ்சிய சில ஓவியங்களே தற்போது காணப்படுகின்றன. எஞ்சியுள்ள ஓவியங்களில் புத்தர் சிலைக்குப் பின்னால் வரையப்பட்டுள்ள ஓவியம் முக்கியமானது.

## கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



பு.பவதாரணி,
விக்டோரியாக் கல்., சுழிபுரம்.



எஃப்.ரிஸ்னா,
தெஹிதெனிய மு.ம.வித்., ஹதரலியத்த.



எஃப்.ரீஹா,
ஸாறா முன்பள்ளி, புத்தளம்.



டேவிட் சொலமன்,
புனித அந்தோனியார் ஆ.ம.வித்.,
கொழும்பு.



பி.சசிதரன்,
மெதடிஸ்ட் கல்லூரி, கந்தபளை.



எஸ்.ஜே.சுஹா,
பறகஹதெனிய தே.பாட., குருநாகல்.



எஃப்.சுஹைனா,
பதுரியா மத்திய கல்., மாவனல்லை.



அ. அபிநந்தன்,
இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.



டி.பிரதீபன்,
சென்.ஜோன் பொஸ்கோ கல்.,
ஹட்டன்.



எஃப்.பஸ்ரா,
அல்-ஹிலால் மத்.கல்.,
நீர்கொழும்பு.



ஸ்டோனி லியானி,
தலவாக்கலை த.ம.வித்.,
தலவாக்கலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விட்டொழிந்த பிடிவாதம்

ரேவதி நன்றாகப் படிக்கும் மாணவி. பிறர் தன்னிடம் ஒப்படைக்கும் வேலைகளை அழகாகவும் பொறுப்பாகவும் செய்து முடிக்கும் திறமைசாலி. பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை அனைவரிடமும் அன்பாகவும் பணிவாகவும் நடந்து கொள்வாள். ஆனால்,ரேவதியின் பிடிவாதக்குணம் மட்டும் யாருக்கும் பிடிக்கவில்லை.



ரேவதியின் அம்மா, அப்பாவிற்கு அவளது பிடிவாதம் பெரிய தலைவலியாக இருந்தது. உடை, பொம்மை, பரிசுப்பொருள் எது கேட்டாலும் உடனே வாங்கிக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் வீட்டையே போர்க்களம்போல் ஆக்கிவிடுவாள்.

நாளைய தினம் ரேவதியின் பிறந்தநாள். வெகு நாட்களாகக் கேட்டுக்கொண்டிருந்த விலை உயர்ந்த கைக்கடிகாரத்தை அன்றே வாங்கித்தரவேண்டும் என்று அவள் அடம் பிடித்தாள். ரேவதியின் அம்மாவும் அப்பாவும் தங்கள் சூழ்நிலையைக் கூறி அடுத்த மாதம் வாங்கித் தருவதாகக் கூறினார்கள். ''அதெல்லாம் எனக்குத் தெரியாது. நான் பாடசாலை சென்று வீட்டிற்கு வரும்போது நான் கேட்ட கைக்கடிகாரம் இங்கே இருக்கவேண்டும். இல்லாவிட்டால், நடப்பதே வேறு'' என்று கட்டளையிடுவதுபோல் கூறிவிட்டுச் சென்றாள்.

ரேவதியின் பெற்றோர் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தனர். மாலையில் பாடசாலை முடிந்ததும் ரேவதி வீட்டிற்கு வந்துகொண்டிருந்தாள். அப்போது மழை பெய்ய ஆரம்பித்தது. உடனே அருகில் இருந்த ஒரு குடிசை ஓரத்தில் ஒதுங்கி நின்றாள். அப்பொழுது அந்த வீட்டிற்குள் இருந்து வந்த சத்தத்தைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

அங்கே ஒரு சிறுமி ''அப்பா உங்களுடைய கால் நன்றாக அடிபட்டிருக்கிறது. இருந்தும் ஏன் வேலைக்குப் போகிறீர்கள்''? என்றாள். ''நீதான், உன்னுடைய பாடசாலையில் சுற்றுலா போவதற்காக என்னை அனுப்பமாட்டீர்களா என்றும் கேட்டாய். நான் விடுமுறை எடுக்காமல் வேலைக்குப் போனால்தான் உனக்கு சுற்றுலா போகப் பணம் தர முடியும்'' என்றார்.

''இல்லை அப்பா, சுற்றுலாவுக்கு நான் போகவில்லை. அடுத்த தடவை போகிறேன். நீங்கள் உங்களுடைய காலைப் பார்த்துக்கொள்ளுங்கள்'' என்றாள் அந்த வீட்டுச் சிறுமி.

''இல்லை, நீங்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள். அவள் போகட்டும். பண்ணைக்காரர் தோட்டத்தில் வேலைக்கு ஆள் கேட்டிருக்காங்க. நான் ஒரு வாரம் வேலைக்குப் போகிறேன். கிடைக்கிற பணம் அவளுக்கு சுற்றுலாப் போகவும், உங்களுடைய காலுக்கு வைத்தியம் பார்க்கவும் உதவியாக இருக்கும்'' என்றாள் அந்த சிறுமியின் அம்மா.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த ரேவதி ஆச்சரியப்பட்டாள். 'ஒரு சிறுமி தன் அப்பாவின் கஷ்டத்தைப் புரிந்துகொண்டு விட்டுக் கொடுக்கிறாள். அம்மா, தன் குழந்தைக்காகவும், கணவருக்காகவும் வேலைக்குப் போகிறேன் என்கிறார். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பதால் அவர்கள் குடிசையில் வாழ்ந்தாலும் சந்தோஷமாக வாழ்கிறார்கள். இனி நாமும் அம்மா, அப்பாவுக்குத் தொந்தரவு கொடுக்கக்கூடாது'' என்று எண்ணினாள்.

ரேவதி வீட்டிற்குச் சென்றதும் அவளது பெற்றோர் என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறிக்கொண்டிருந்தனர். ''ரேவதி....'' என்று அவர்கள் வாயெடுக்க, ''அப்பா கைக்கடிகாரம் இப்போது வேண்டாம். அடுத்த பிறந்தநாளைக்கு வாங்கிக்கொள்ளலாம்'' என்று கூறியவளைப் பார்த்து வியப்படைந்தனர் அவளது பெற்றோர். தனது பிடிவாதக்குணத்தை அழித்த மகிழ்ச்சியோடு பிறந்தநாளைக் கொண்டாடினாள் ரேவதி.

---

# பாலனின் சமயோசிதம்

மதன், பாலன் இருவரும் சாதாரண தரம் படிக்கும் நண்பர்கள். மதன் திடீரென்று புகை பிடிப்பதைப் பார்த்துப் பாலன் அதிர்ந்துவிட்டான். இந்தப் பழக்கம் வரதன் சேர்க்கையால் வந்தது என்பதை அவன் அறிந்துகொண்டான்.

வரதன், மதன் வீட்டுக்கு எதிரில் சில மாதங்களுக்கு முன்னரே குடிவந்திருந்தான். வரதன் கல்லூரியில் படிப்பவன். இதனால், பாடசாலை நேரம் போக மீதி நேரங்களில் மதன் வரதனோடு ஊர் சுற்ற ஆரம்பித்தான். இதனால், வரதனின் பழக்கவழக்கங்கள் மதனுக்கும் ஒட்டிக்கொண்டன.

மதன் முன்னர்போன்று பாலனிடம் பழகுவதில்லை. அவனிடம் பேச்சைக் குறைத்துக்கொண்டான். மதனின் அப்பாவுக்கும் அவன் புகைபிடிக்கும் பழக்கம் தெரிந்துபோனது. திட்டியும், அடித்தும் பார்த்தார். ஆனால், அவனோ அடங்காமல், வரதனோடு சேர்ந்து ஊர் சுற்றினான்.




இதுகுறித்து மதனின் அப்பா, அவனது ஆசிரியரிடம் புகைப்பிடிக்கும் பழக்கத்தைக் கைவிட அறிவுரை கூறுமாறு கூறினார். ஆசிரியர் எவ்வளவோ அறிவுரை கூறிப் பார்த்தும் அவன் திருந்தியபாடில்லை. சிலநாட்களில், 'புகையிலை ஒழிப்பு நாள்' வர இருந்தது. அதற்காக, பாடசாலை ஆசிரியர் தலைமையில் ஊர்வலம் நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்த பாடசாலை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த ஊர்வலத்திற்கு பாலன்தான் மாணவத் தலைவனாக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தான். அவன்தான் விழிப்புணர்வு வாசகங்களை அட்டையில் எழுத வேண்டி இருந்தது. இதனால், அவன் சமயோசிதமாக மதனை உதவிக்கு அழைத்தான்.

''மதன், உன் கையெழுத்து மிக அழகாக இருக்கும். அதனால், எனக்கு இந்த வாசகங்களை எழுதிக்கொடு'' என்று கேட்டான். மதனும் எழுதிக் கொடுக்கச் சம்மதித்தான்.

''புகை நமக்குப் பகை'', ''புகை புற்றுநோயின் தாய்'', ''புகை இதயத்தைக் கொல்லும் எமன்'', ''புகையின் பரிசு தீராத இருமல் மற்றும் காசநோய்'' போன்ற வாசகங்களை பாலன் சொல்லச் சொல்ல மதன் எழுதி முடித்தான்.

அந்த வாசகங்களை எழுதும்போது, அவன் சிந்தனை வசப்பட்டான். ''பாலா புகைபிடித்தால் இவ்வளவு தீமையா? இவ்வளவு நாளும் உயிரை அரிக்கும் கரையான் என்று தெரியாமல் புகைப்பழக்கத்தை கடைப்பிடித்து வந்தேன். இனிமேல் புகை பிடிக்கவே மாட்டேன்'' என்று உறுதி அளித்தான். மறுநாள் ஊர்வலத்தில் மதனின் புகை ஒழிப்பு விழிப்புணர்வுக் குரல்தான் அதிகமாக ஒலித்தது.

---

# பசுவின் திட்டம்

செழிப்பான சிற்றூரில் விவசாயி வைத்தியநாதன் வாழ்ந்து வந்தார். அவருடைய நிலத்தில் பச்சை பசேலென்று புற்கள் முளைத்து மிக ரம்மியமாக காட்சியளித்துக்கொண்டிருந்தன.

இதனால், பசு ஒன்றை வாங்கினால், அதன்மூலம் தமக்கு நல்ல வருமானம் கிடைக்கும் என எண்ணினார். மறுநாள் சந்தைக்குச் சென்று ஒரு சீமைப் பசு ஒன்றைக் கன்றுடன் மிகவும் குறைந்த விலைக்கு வாங்கினார். இவ்வாறு குறைந்த விலைக்கு வாங்கியது தனது அதிர்ஷ்டம் என்று எண்ணிய அவர் அதனை வீட்டுக்கு ஓட்டிச் சென்றார்.

வீட்டில் தென்னங்கீற்றால் ஒரு சிறிய பந்தல் அமைத்து அதில் பசுவையும் கன்றையும் கட்டிப்போட்டார். செழித்து வளர்ந்த புற்களை



உண்டு, பசு அதிக அளவில் பால் கொடுக்க ஆரம்பித்தது. இதனால், வைத்தியநாதன் மகிழ்ச்சி அடைந்தார். பண்ணைக்குப் பால் ஊற்றி நிறைய வருவாய் ஈட்டினார். பசுவுக்கு 'செல்லம்மா' என்று பெயர் சூட்டி, மிகவும் பாசமாகப் பார்த்துக்கொண்டார். பாலின் அளவு நாளுக்கு நாள் அதிகரிக்க அடுத்து இரண்டு மாடுகளை வாங்கினார். அடுத்து இரண்டு மாதங்களில் மேலும் இரண்டு மாடுகளை வாங்கினார். இப்போது அவர் வீட்டுத் தொழுவமே சிறிய பண்ணை போல் காட்சி அளித்தது.

பல பசுக்கள் இருந்தாலும், தான் முதன்முதலாக வாங்கிய பசுவான 'செல்லம்மா' மீது அவருக்கு அதிக பற்றும் பாசமும் இருந்தது. காலையில் எழுந்ததும் செல்லம்மா பசுவுக்கு மட்டும் விசேடமாக புண்ணாக்கு மற்றும் மாட்டுத் தீவனத்தை வைப்பார். செல்லம்மா பசுவும் மற்ற மாடுகளைவிட 5 லீற்றர் கூடுதலாகப் பால் கறந்தது.

நல்ல வருமானம் கிடைத்ததால் வைத்தியநாதன் வாழ்க்கைத் தரம் உயர்ந்தது. அவர் நகரத்துக்கு வேனில் பால் சப்ளை செய்யும் அளவுக்கு பணக்காரனானார். அத்தனை வசதிக்கும் காரணம், செல்லம்மாதான் என்பதால் அதன்மேல் மேலும் மேலும் அவரது பற்று அதிகரித்தது. இதனைக் கண்ட ஏனைய பசுக்கள் பொறாமைப்பட்டன. ஒன்றோடொன்று சேர்ந்து கூடிப் பேசிய பின் பாலைக் குறைவாக கறக்கத் தொடங்கின. இதனால், பால் உற்பத்தி தடைப்பட்டது.

வைத்தியநாதனால் போதிய அளவிற்கு பால் ஏற்றுமதி செய்ய முடியவில்லை. பால் குறைவதற்கு என்ன காரணம் என்பதையும் அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால், செல்லம்மா பசுவிற்கு ஏனைய மாடுகளின் திட்டம் நன்கு விளங்கியது. எனவே, தனது எஜமானனுக்காக, ஒரு திட்டம் தீட்டியது.

மறுநாள் செல்லம்மாப் பசு, தனக்குக் கொடுத்த மாட்டுத் தீவனத்தை உண்ணவில்லை. ஊட்டச்சத்துக் கலந்த தண்ணீரையும் குடிக்க மறுத்தது. அதனால், அதை ஏனைய மாடுகளுக்கு வைத்தான் வைத்தியநாதன். ஏனைய மாடுகள் ஆவலோடு அவற்றை உண்டன. இதைக் கண்ட செல்லம்மா பசு மகிழ்ச்சி அடைந்தது. அதன்பின்னர்தான் அது சாப்பிட ஆரம்பித்தது.

இதைப் பார்த்த வைத்தியநாதனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''ஓ....உங்களுக்குள்ளும் இப்படியொரு பிரச்சினையா? இனி உங்கள் அனைவருக்கும் சமமாக உணவிடுவேன்'' என்று தனக்குள் உறுதி எடுத்தான். இதனால், செல்லம்மா உட்பட, அனைத்துப் பசுக்களும் அதிகமான பாலைக் கறந்தன. இதனால், வைத்தியநாதன் பெரிய செல்வச் சீமானாக மாறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන්
## ஆயுபோவன்
## வணக்கம்

**இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகளுக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்**

**දුව: අම්මේ! අපි අද ලතාව බලන්න යමුද?**
அம்மே! அப்பி அத லதாவ பளன்ன யமுத?
மகள்: **அம்மா! நாங்கள் இன்று லதாவைப் பார்க்கப் போவோமா?**

**අම්මා: ඒ ඇයි දුව?**
ஏ எய் துவ?
அம்மா: **அது ஏன் மகள்?**

**දුව: ලතාට උණ. තද ඔලුව කැක්කුමලු.**
லதாட்ட உண. தத ஒலுவ கெக்குமலு.
மகள்: **லதாவுக்குக் காய்ச்சல். கடுமையான தலைவலியாம்.**

**අම්මා: ඉතින් බෙහෙත් අරගෙන නැද්ද? ඔයාට කවුද කිව්වේ ලතාට සනීප නැහැ කියලා?**
இதின் பெஹெத் அறகென நெத்த? ஒயாட்ட கவுத கிவ்வே லதாட்ட சனீப நெஹெ கியலா?
அம்மா: **இனி மருந்து எடுத்ததில்லையா? லதாவுக்குச் சுகம் இல்லையென்று உங்களுக்கு யார் சொன்னார்?**

**දුව: අද උදේ කඩේදි නැන්දා මුණගැහුණා. එයා කිව්වේ.**
அத உதே கடேதி நெந்தா முணகெஹுனா. எயா கிவ்வே.
மகள்: **இன்று காலை கடையில் மாமியை சந்தித்தேன். அவர்தான் சொன்னார்.**

**අම්මා: එහෙනම්, අපි අද සවස යමු.**
எஹெனம், அப்பி அத சவச யமு.
அம்மா: **அப்படியென்றால், இன்று பின்னேரம் நாங்கள் போவோம்.**

**දුව: අපි මොනවාද ලතාට අරගෙන යන්නේ?**
அப்பி மொனவாத லதாட்ட அறகென யன்னே?
மகள்: **நாங்கள் லதாவுக்கு என்ன கொண்டுபோவோம்?**

**අම්මා: අපි දොඩම් ටිකකුයි නෙස්ටමෝල්ට් එකකුයි අරගෙන යමු.**
அப்பி தொடம் டிக்ககுய் நெஸ்டமோல்ட் எக்ககுய் அறகென யமு.
அம்மா: **நாங்கள் சில தோடம்பழங்களும் நெஸ்டமோல்ட்டும் கொண்டுபோவோம்.**

**දුව: කීයට විතරද යන්නේ අම්මේ?**
கீயட்ட விதரத யன்னே அம்மே?
மகள்: **எத்தனை மணியளவில் போவோம் அம்மா?**

**අම්මා: අපි සවස හතරට විතර යමු.**
அப்பி சவச ஹதரட்ட விதற யமு.
அம்மா: **நாங்கள் பின்னேரம் நான்கு மணியளவில் போவோம்.**

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க**

i. லதாவைப் பார்க்கப் போவோமா?
.......................................................
ii. கடையில் மாமியை சந்தித்தேன்.
.......................................................
iii. லதாவுக்கு என்ன கொண்டுபோவோம்?
.......................................................






**Have** மற்றும் **Has** முதலான துணை வினைச்சொற்களை (Auxiliary Verbs) கையாண்டு அமைக்கப்படும் உடன்பாடு வாக்கியங்களை மேலும் இங்கே பயில்வோம்.

(அ) அந்த ஆண் பிள்ளைகள் கைத்தொலைபேசிகள் வைத்திருக்கின்றன.
அந்த ஆண் பிள்ளைகளிடம் கைத்தொலைபேசிகள் உண்டு.
The boys have hand-phones.

(ஆ) அந்தப் பெண் பிள்ளைகள் பைகள் வைத்திருக்கின்றன.
அந்தப் பெண் பிள்ளைகளிடம் பைகள் உண்டு.
The girls have bags.

(இ) அந்தச் சிறுவர்கள் விளையாட்டுப் பொருட்கள் வைத்திருக்கின்றனர்.
அந்தச் சிறுவர்களிடம் விளையாட்டுப் பொருட்கள் உண்டு.
The children have toys.

(ஈ) அந்த விவசாயிகள் கலப்பைகள் வைத்திருக்கின்றனர்.
அந்த விவசாயிகளிடம் கலப்பைகள் உண்டு.
The farmers have ploughs.

(உ) ஆசிரியர்கள் கைப்பைகள் வைத்திருக்கின்றனர்.
ஆசிரியர்களிடம் கைப்பைகள் உண்டு.
The teachers have hand-bags.

(ஊ) தையற்காரர்கள் தையல் இயந்திரங்கள் வைத்திருக்கின்றனர்.
தையற்காரர்களிடம் தையல் இயந்திரங்கள் உண்டு.
The tailors have sewing-machines.

(அ) எனது சகோதரன் ஒரு கார் வைத்திருக்கின்றான்.
எனது சகோதரனிடம் ஒரு கார் உண்டு.
My brother has a car.

(ஆ) எனது சகோதரனுக்கு நோர்வேயில் ஒரு சினேகிதன் உள்ளான்.
My brother has a friend in Norway.

(இ) எனது சகோதரி ஒரு கம்பியூட்டர் வைத்திருக்கின்றாள்.
எனது சகோதரியிடம் ஒரு கம்பியூட்டர் உண்டு.
My sister has a computer.

(ஈ) எனது சகோதரிக்கு கெனடாவில் ஒரு சிநேகிதி உள்ளாள்.
My sister has a friend in Canada.

(உ) எனது தாய் கைத்தொலைபேசி ஒன்று வைத்திருக்கின்றார்.
எனது தாயிடம் கைத்தொலைபேசி ஒன்று உண்டு.
My mother has a hand-phone.

(ஊ) எனது தாய்க்கு லண்டனில் ஒரு சகோதரன் உண்டு.
My mother has a brother in London.

(எ) எனது தந்தை ஒரு லொறி வைத்திருக்கின்றார்.
எனது தந்தையிடம் ஒரு லொறி உண்டு.
My father has a lorry.

(ஏ) எனது தந்தைக்கு அமெரிக்காவில் ஒரு சகோதரி உண்டு.
My father has a sister in America.

(ஐ) எனது தந்தைக்கு வவுனியாவில் ஒரு கடை உண்டு.
My father has a shop in Vavuniya.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானுடனான தொடர்புகளைக் கைவிடுவதாக கனடா அறிவிப்பு

ஈரானுடனான இராஜதந்திரத் தொடர்புகளை தற்காலிகமாக கைவிடுவதாக கனடா அரசாங்கம் அறிவித்துள்ளது. கனடாவிற்கான ஈரான் தூதுவர் உட்பட, அந்நாட்டின் அரச அதிகாரிகளை ஐந்து தினங்களுக்குள் கனடாவிலிருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உலகிற்கு ஈரான் ஓர் அச்சுறுத்தலான நாடாக உள்ளபோதிலும், இஸ்ரேல் தெரிவிப்பதுபோல் ஈரானைத் தண்டிப்பதற்காக, தாக்குதல் நடத்த



வேண்டும் என்ற கொள்கைக்கமைய, எந்தவொரு தீர்மானத்தையும் கனடா மேற்கொள்ளாது என்று கனடா வெளிநாட்டமைச்சர் ஜோன் பெயிட் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஈரானுடனான தொடர்புகளை கைவிடுவதற்கு கனடா மேற்கொண்டுள்ள தீர்மானம் வரவேற்கத்தக்கது என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்ஜமின் நெதன்யாஹு குறிப்பிட்டுள்ளார். ஈரான் பேரழிவை ஏற்படுத்தவல்ல அணு ஆயுதங்களை தயாரிப்பதாகக் கூறியே அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் ஈரானைத் தனிமைப்படுத்த முயற்சிக்கின்றன. எனினும், ஈரான் தாம் ஆக்கப்படைப்புக்களுக்கு மட்டுமே இந்த அணு வளத்தைப் பயன்படுத்தி வருவதாக கூறிவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## 'மாவோ' அமைப்பு பயங்கரவாத பட்டியலிலிருந்து நீக்கப்பட்டது

நேபாளத்தின் மாவோ அமைப்பானது, ஒரு பயங்கரவாத அமைப்பல்ல என்றும் பயங்கரவாத அணிகளின் பட்டியலிலிருந்து அந்த அமைப்பின் பெயர் நீக்கப்படுவதாகவும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதன்படி, இந்த அமைப்பிற்கு எதிராக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த தடைகள் அனைத்தும் முழுமையாக நீக்கப்படுவதாகவும் அமெரிக்கா மேலும் தெரிவித்துள்ளது. நேபாள அரசாங்கத்திற்கு எதிராக நீண்ட காலமாக ஆயுதப் போராட்டத்தை நடத்தி வந்த மாவோ அமைப்பானது, 2006 ஆம் ஆண்டு தமது ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக அரசியலில் ஈடுபட்டது.



இதனையடுத்து நடைபெற்ற இரண்டு பொதுத் தேர்தல்களிலும் மாவோ அமைப்பு அமோக வெற்றியீட்டியிருந்தது.

1996 ஆம் ஆண்டு தொடக்கம் 2006 ஆம் ஆண்டுவரை நடைபெற்ற மோதல்களின் காரணமாக 16,000 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருந்த சந்தர்ப்பத்திலேயே, 'மாவோ' அமைப்பை பயங்கரவாத அமைப்பாக அமெரிக்கா அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அற்லஸ் கேள்வி - 378

**கேள்வி:** நேபாள த்தில் மாவோ அமைப்பு எத்தனையாம் ஆண்டில் ஆயுதங்களை கைவிட்டது?

சரியான விடை..................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 378,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 376 இன் சரியான விடை:** டொன்காரிரோ

**பரிசு பெறுவோர்**

ஓமார் ஷுக்ரி,
மெடிகே, மடவல பஸார்.

வி.யூலிஸ்ட்ரா,
குணாநந்த மாவத்தை, கொழும்பு-13.

எஸ்.மிதுக்ஷன்,
செங்கலடி, மட்டக்களப்பு.




அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...


# இளவரசர் ஹெரி மீண்டும் இராணுவத்தில்

பிரிட்டன் இளவரசர் ஹெரி போர் ஹெலிகொப்டரை செலுத்தும் பணியின் நிமித்தமாக மீண்டும் ஆப்கானிஸ்தானுக்கு சென்றிருப்பதாக பிரிட்டனின் பாதுகாப்புத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இராணுவப் பணியில் கெப்டன் வேல்ஸ் என்ற பெயரில் அழைக்கப்படுகின்ற இளவரசர் ஹெரி இராணுவப் பணியிலிருந்து நீங்கி நான்கு வருடங்களின் பின்னரே, ஆப்கானிஸ்தானின் ஹெல்மன்ட் என்ற பிரதேசத்திற்கு இவ்வாறு மீண்டும் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மீண்டும் போர் பணியில் இணைந்துள்ள இளவரசர் ஹெரி தேடுதல் பணி மற்றும்



விமானங்களுக்கான பாதுகாப்பு வழங்குதல் ஆகிய கடமைகளில் ஈடுபடுவார்.

## தெரிந்து கொள்வோம்

* சுமேரிய அல்லது பபிலோனிய நாகரிகம் நிலவிய நாடுகள் இன்று என்ன பெயரால் அழைக்கப்படுகின்றது?
  ஈராக், ஈரான்



* இலங்கையின் பிரதான புகையிரதப் பாதைகளில் ஓடும் புகையிரத சேவைகள் ஒவ்வொரு பெயரால் அழைக்கப்படுகின்றன. உ+ம் யாழ்தேவி, கொழும்பு,காங்கேசன்துறை வரை ஓடியது. அவ்வாறே, கொழும்பு-பதுளை, கொழும்பு - மட்டக்களப்பு புகையிரத சேவைகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?
  முறையே உடரட்ட மெனிக்கே, ஹிஜ்ரா



* இலங்கையின் இன்றைய ஜனாதிபதி மாளிகை முன்னர் இராணி மாளிகையென அழைக்கப்பட்டது. அவ்வாறே இந்தியாவில் ராஷ்டிராபதிபவன் சுதந்திரத்திற்கு முன்னர் எவ்வாறு அழைக்கப்பட்டது?
  வைஸ்ரிஜிகல் லொட்ஜ்



* பான் கீ மூன் ஐ.நா.வின் செயலாளர் நாயகமாகத் தெரிவாவதற்கு முன்னர் ஆசியாவைச் சேர்ந்த மற்றுமொருவர் செயலாளர் நாயகமாக கடமையாற்றியுள்ளார். அவரின் பெயர் என்ன? எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
  ஊதாண்ட் (பர்மா மியன்மார்)



* Twinkle Twinkle Little Star என்ற புகழ்பெற்ற பாடலை இயற்றியவர் யார்?
  ஆன் றெய்னா

* இலங்கை நாணயத்திற்கு ஆகக் கூடிய செலாவணி விகிதம் பின்வருவனவற்றுள் எந்த வெளிநாட்டு நாணயத்தின்மூலம் கிடைக்கின்றது?
  i. ஐ. அ. டொலர் ii. ஸ்ரேலிங் பவுண்
  iii. ஓமான் ரியால் iv. குவைத் தினார்




* 2012 குடிசனத் தொகைக் கணிப்பின்படி, இலங்கையில் 2.2 கோடி பேர் உள்ளனர். இலங்கையில் முதல் குடிசனத் தொகை கணிப்பு 1871 இல் நடைபெற்றது. அப்போதைய குடிசனத் தொகை எவ்வளவு?
  2.4 மில்லியன்





* இலங்கையின் வரலாற்றை அறியக் கல்வெட்டுக்கள் பிரதான ஆதாரங்களாகும்.கல்வெட்டுகளில் உள்ள வாசகங்களை முதலில் வாசித்து விளக்கிய தொல்பொருளியலாளர் யார்?
  செனரத் பரணவிதான

**தொகுப்பு: உடுவை பரந்தாமன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுவென்டி டுவென்டி உலகக் கிண்ண கால அட்டவணை

டுவென்டி டுவென்டி உலகக் கிண்ணப் போட்டிகள் செப்டெம்பர் 18 ஆம் திகதி ஆரம்பமாகி ஒக்டோபர் 07 ஆம் திகதி வரை நடைபெறுகின்றது. A, B, C, D என்று நான்கு பிரிவுகளில் இப்போட்டிகள் நடைபெறுகின்றன. போட்டி அட்டவணை வருமாறு;




| A | B | C | D |
|---|---|---|---|
| இங்கிலாந்து | அவுஸ்திரேலியா | இலங்கை | பாகிஸ்தான் |
| இந்தியா | மே.இ.தீவுகள் | தென்னாபிரிக்கா | நியூஸிலாந்து |
| ஆப்கானிஸ்தான் | அயர்லாந்து | சிம்பாப்வே | பங்களாதேஷ் |

**முதல் சுற்றுப் போட்டிகள்**

| | |
|---|---|
| செப்டெம்பர் 18 | இலங்கை/சிம்பாப்வே |
| செப்டெம்பர் 19 | அவுஸ்திரேலியா/அயர்லாந்து |
| செப்டெம்பர் 19 | ஆப்கானிஸ்தான்/இந்தியா |
| செப்டெம்பர் 20 | தெ.ஆபிரிக்கா/ சிம்பாப்வே |
| செப்டெம்பர் 21 | பங்களாதேஷ்/நியூஸிலாந்து |
| செப்டெம்பர் 21 | ஆப்கானிஸ்தான்/இங்கிலாந்து |
| செப்டெம்பர் 22 | இலங்கை/தெ.ஆபிரிக்கா |
| செப்டெம்பர் 22 | அவுஸ்திரேலியா/மே.இ.தீவுகள் |
| செப்டெம்பர் 23 | நியூஸிலாந்து/பாகிஸ்தான் |
| செப்டெம்பர் 23 | இங்கிலாந்து/இந்தியா |
| செப்டெம்பர் 24 | அயர்லாந்து/மே.இ.தீவுகள் |
| செப்டெம்பர் 25 | பங்களாதேஷ்/பாகிஸ்தான் |

சுப்பர் 8 சுற்றுப் போட்டிகள் செப்டெம்பர் 27 ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 02 ஆம் திகதிவரை நடைபெறும். இதில் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் ஒக்டோபர் 4 தொடக்கம் 7 வரை நடைபெறும்.



# 20/20 உலகக் கிண்ணத்தை இலங்கையே கைப்பற்றும்

## மஹேல ஜயவர்தன

ஐ. சி. சி. யின் உலகக் கிண்ண டுவென்டி டுவென்டி போட்டியில் இலங்கை அணி செம்பியன் ஆவதற்கு அதிக வாய்ப்பிருப்பதாக இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

18 ஆம் திகதி ஆரம்பமாகியுள்ள மேற்படி 'டுவென்டி டுவென்டி' போட்டிகள் குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே மஹேல மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னரும் ஐ. சி. சி. யின் உலக மட்டத்திலான போட்டிகளில் இலங்கை அணி பிரகாசித்து வந்துள்ளது. கடந்த ஐம்பது ஓவர் உலகக் கிண்ணப் போட்டிகள் இதற்கு சிறந்தவோர் உதாரணமாகும். இப்போட்டியில் இலங்கை அணி இறுதிப் போட்டிவரை முன்னேறியமை குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமன்றி இம்முறை 'டுவென்டி டுவென்டி' போட்டிகள் இலங்கையில் நடைபெறுவதால் இலங்கையிலுள்ள ஆடுகளங்கள் நன்றாக இலங்கை அணிக்கு பரீட்சயமிக்கதாக இருப்பதால் இலங்கை அணிக்கே இம்முறை வெற்றி வாய்ப்பு அதிகம் இருப்பதாகவும் மஹேல மேலும் தெரிவித்துள்ளார்.

# பகிரங்க டென்னிஸில் செரீனா செம்பியன்



அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் பெலாரஸ் நாட்டின் விக்டோரியா அஷரென்காவைத் தோற்கடித்து அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் செம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

மேற்படி போட்டி அமெரிக்காவில் நடைபெற்றபோது, மகளிர்க்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் முதலாவது செட்டை 6-2 என்ற கணக்கில் செரினா வில்லியம்ஸூம் இரண்டாவது செட்டை 6-2 என்ற கணக்கில் விக்டோரியாவும் சமநிலையில் வெற்றியீட்டியமையால் மூன்றாவது செட்டை வெற்றியீட்டுபவரே, செம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றலாம் என்ற விறுவிறுப்பான நிலை காணப்பட்டது. தொடர்ந்து நடைபெற்ற மூன்றாவது செட்டில் 7-5 என்ற கணக்கில் வெற்றியீட்டிய செரினா வில்லியம்ஸ் செம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

# பராலிம்பிக்கில் சீனா முதலிடம் பெற்றது

மாற்றுத் திறனுடையவர்களுக்கென லண்டனில் நடைபெற்ற பராலிம்பிக் போட்டிகளில் சீனா மொத்தம் 231 பதக்கங்களுடன் முதலாமிடத்தைப் பெற்றுள்ளது.



ஓகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி ஆரம்பமாகிய மேற்படி பராலிம்பிக் போட்டிகளில் 164 நாடுகளைச் சேர்ந்த 4,294 வீர வீராங்கனைகள் பங்குபற்றினர். இதில் முதலாமிடத்தைப் பெற்ற சீனா 95 தங்கம், 71 வெள்ளி, 65 வெண்கலம் என மொத்தமாக 231 பதக்கங்களைப் பெற்றது. இரண்டாவது இடத்தை ரஷ்யாவும், மூன்றாவது இடத்தை இங்கிலாந்தும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டிகளில் அமெரிக்கா 6 ஆவது இடத்தையே பெற முடிந்தது.

# கரப்பந்தாட்டம் (Volley ball)





## வரலாறு

அமெரிக்காவைச் சேர்ந்த உடற்பயிற்சி ஆசிரியர் வில்லியம் மார்கன் என்பவரே 1800 ஆம் ஆண்டின் இறுதியில் கரப்பந்தாட்ட (Volley ball) விளையாட்டைக் கண்டுபிடித்தவராவார். 1949 ஆம் ஆண்டு தொடக்கம் சர்வதேச கரப்பந்தாட்ட அமைப்பு ஆண்களுக்கான உலக செம்பியன் போட்டிகளை நடத்தி வருகிறது. பின்னர் 3 ஆண்டுகள் கழித்து பெண்களுக்கான உலக செம்பியன் போட்டிகளும் தொடங்கின.

இதனையடுத்து 1964 ஆம் ஆண்டு ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்ற டோக்கியோ ஒலிம்பிக்போட்டியில் கரப்பந்துப் போட்டிகளும் இடம்பெறத் தொடங்கின.

## சாதனையாளர்கள்

1976 ஆம் ஆண்டு மாண்ட்ரீல் நகரில் நடந்த ஒலிம்பிக்போட்டியின் இறுதி ஆட்டத்தில் எட்வர் உஸ்ரோக் தலைமையிலான போலந்து அணி சோவியத் ரஷ்யா அணியைத் தோற்கடித்து தங்கம் வென்றது. தனது 21 ஆவது வயதில் இருந்து 4 ஒலிம்பிக்போட்டியில் கலந்துகொண்ட இவர் தனது அதிரடி ஆட்டத்தின் மூலம் 'கிரேட் பாமர்' என்ற பெயர் பெற்றார். ஒலிம்பிக்போட்டி வெற்றிக்கு 2 ஆண்டுக்கு முன்பு உலகக் கோப்பைப் போட்டிக்கும் போலந்து அணிக்கு இவர்தான் தலைவராக இருந்தார்.

## உங்களுக்குத் தெரியுமா?

கால்பந்தாட்டத்துக்குப் புகழ் பெற்ற பிரேசில் நாட்டில், அந்த நாட்டின் கரப்பந்தாட்ட அணி 7 முறை உலக லீக் பந்தயத்தில் செம்பியன் பட்டம் பெற்றுள்ளது. இதில் 2007 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடந்த போட்டியில் ரஷ்யாவை 3-1 என்ற புள்ளிக்கணக்கில் தோற்கடித்ததன் மூலம் 5 முறை தொடர்ந்து செம்பியன் பட்டம் பெற்றது.

## விதிமுறைகள்

18 மீற்றர் நீளம் 9 மீற்றர் அகலம் கொண்ட உள்ளரங்க மைதானத்தில் கரப்பந்தாட்டம் நடைபெறுகிறது. இந்த மைதானம் வலை ஒன்றின் மூலம் சமமாகப் பிரிக்கப்பட்டிருக்கும். ஆண்கள் பிரிவுப் போட்டியின் போது, வலையின் உயரம் 2.43 மீற்றர் ஆகவும், பெண்களுக்கான போட்டியின்போது, இதன் உயரம் 2.24 மீற்றர் ஆகவும் இருக்கும்.

ஒரு அணியில் தலா 6 பேர் இருப்பார்கள். பெரும்பாலும் வலையின் அருகே 3 பேர் நின்று பந்து தமது பகுதிக்கு வராமல் தடுப்பார்கள். ஒவ்வொரு அணியும் தங்கள் பகுதிக்குள் வரும் பந்தை 3 முறை மட்டுமே தொட முடியும். அதற்குள் எதிர் அணியின் பகுதிக்கு அனுப்பி விட வேண்டும். கை விரல்களைப் பயன்படுத்தியே பந்தைத் தடுக்க வேண்டும். அடிக்க வேண்டும். சிலநேரங்களில் கையின் முன்பகுதியைப் பயன்படுத்துவதும் உண்டு. எதிர் அணியின் தரைப்பகுதியைப் பந்து தொட்டுவிட்டால் ஒரு வெற்றிப் புள்ளி அளிக்கப்படும். 25 புள்ளிகள் வரை ஒரு ஆட்டம் நடைபெறும். 3 அல்லது 5 ஆட்டங்களில் எந்த அணி அதிக வெற்றி பெறுகிறதோ, அந்த அணி வெற்றி பெற்ற அணியாகக் கருதப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றலுக்கு உதவும் 'ESR' முறை




**கல்வி**
**முகாமைத்துவம் - 125**
**கற்றலுக்கான ஆலோசனைகள்**

'ESR' என்பது E- Encoding, S- Storing, R-Recalling என விரிவாக்கம் பெறும். 'Encoding' என்கின்றபோது, ஒரு விடயத்தை நாம் உள்வாங்கிக்கொள்வதைக் குறிக்கின்றது. அந்தவகையில், நாம் காட்சி, செவிமடுத்தல், புலனுணர்வு என்பவற்றினூடாக, ஏதாவது ஒரு விடயத்தை உள்வாங்கிக்கொள்வதனை இது குறிக்கின்றது. கற்றலில் ஒரு பாடத்தை வாசிப்பதனூடாக அல்லது மனனம் செய்வதனூடாக விடயங்களை உள்வாங்கி அறிந்துகொள்கின்றோம். இவ்வாறு விடயங்களை உள்வாங்கிக்கொள்வதே, கற்றலின் ஆரம்பப் படியாகவும் முதன்மையான படியாகவும் அமைந்துவிடுகின்றது. ஆகவே, இந்த ஆரம்ப கட்டத்தை மேற்கொள்ளும்போது, மிகுந்த கவனத்துடனும் அவதானத்துடனும் செயற்பட வேண்டும்.

'Storing' என்னும்போது, ஒரு விடயத்தை மனதில் பதித்தலைக் குறிக்கின்றது. இதன்போது மூளைக்குச் செல்லும் தகவல்கள் யாவற்றையும் மிகவும் நுணுக்கமாகவும் தெளிவாகவும் அனுப்பி வைக்க வேண்டும். அப்போதுதான் அதனை இலகுவாக மீளப் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும்.

இவ்வாறாக விடயங்களை உள்வாங்கும்போதும் மூளையில் பதிக்கும்போதும் ஏற்படும் அசௌகரியங்களை உடனே தவிர்த்துக்கொள்ள வேண்டும். இதற்கு ஓய்வு மிகவும் அவசியமாகின்றது. விடயங்களை மூளையில் பதிக்கும்போது, குழப்பமான நிலையில் அனுப்பி வைக்காமல், நிதானமான நிலையில் பதித்துக்கொள்ள வேண்டும். விடயங்களை



பதிந்துகொள்ள மனனம், விளக்கம், மீளக்கற்றல் என்பன துணைபுரிகின்றன. அத்துடன், விடயங்களை மேலெழுந்தவாரியாகவோ, சிக்கலாகவோ, அரை குறையாகவோ மனதில் பதிந்துகொள்ளக்கூடாது. மாறாக, விடயங்களை தெளிவாகவும் ஆழமாகவும் விளக்கத்துடனும் முழுமையாகவும் கற்று மனதில் பதியவைக்க வேண்டும்.

இறுதிக் கட்டமாக இருப்பது 'Recalling' ஆகும். இது விடயங்களை வெளியில் கொண்டு வருவது அதாவது, மீள நினைவுபடுத்துவதைக் குறிக்கின்றது. இந்நிலை பொதுவாக பரீட்சையின்போதே அவசியப்படுகின்றது. ஆகவே, மூளையில் முறையாகப் பதிக்கப்பட்ட விடயத்தை பரீட்சை நேரத்தில் நினைவுபடுத்தும்போது, அதனை இலகுவாகவும் வேகமாகவும் ஒவ்வொன்றாக மூளையிலிருந்து வெளியே எடுக்க வேண்டும். இவற்றை ஒரு படிமுறையின் கீழ் ஞாபகப்படுத்திக்கொண்டால், அனைத்து விடயங்களும் ஞாபகத்திற்கு வரும். பரீட்சையையும் சிறப்பாகச் செய்ய முடியும்.

ஆகவே, ESR முறையானது, கற்றலுக்கு சிறந்த பயனைத் தரும். அத்துடன், கற்றலின்போது இவ்வாறான முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் கற்றலை சிறப்பாக முகாமைத்துவம் செய்துகொள்ளலாம்.

(தொடரும்)

**எம்.ஏ.எஃப்.சப்ரானா**

# எறும்புகள் பற்றிய அனைத்தையும் அறிய உதவும் இணையத்தளம்

*உலகிலுள்ள அனைத்து வகையான எறும்புகள் பற்றிய சகல விபரங்களையும் உள்ளடக்கிய வகையில், முப்பரிமாணப் படங்களுடன்கூடிய இணையத்தளம் ஒன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் உருவாக்கி வருகின்றனர்.*

'ஏன்ட்வெப்' (antweb) என்றழைக்கப்படும் இந்த இணையத்தளத்தில் எறும்புகள் பற்றி இதுவரை தாம் சேகரித்துள்ள அனைத்து விபரங்களையும் விஞ்ஞானிகள் இதில் உள்ளடக்கியிருக்கின்றனர். ஆரம்பத்தில் இந்த இணையத்தளத்தில் 8,000 எறும்பு வகைகளின் படக்குறிப்புகளை உள்ளடக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த இலக்கு தற்போது விஸ்தரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, அவர்களின் இணையத்தளத்தில் தற்போதளவில் சுமார் 3,24,941 எறும்பு வகைகள் பற்றிய விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தற்போது அமெரிக்க விஞ்ஞானிகள் குழுவொன்று உலகம் முழுவதும் உள்ள அருங்காட்சியகங்களுக்குச் சென்று, அவற்றிலுள்ள அனைத்து எறும்பு வகைகளினதும் விபரங்களையும் பட விளக்கக் குறிப்புகளையும் பெற்று வருகின்றனர்.

இந்த செயற்பாட்டிற்கு அமெரிக்க கெலிஃபோர்னியா விஞ்ஞான எகடமியின் கலாநிதி ப்ரயன் ஃபிஷர் தலைமை தாங்குகின்றார். புதிய தொழில்நுட்பங்களைக் கையாண்டு எறும்புகளின் படங்கள் எடுக்கப்படுவதனூடாக, எறும்புகளின் சரீரம் குறித்த மிகத் துல்லியமான விபரங்களை விஞ்ஞானிகளினால் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் கூறப்படுகின்றது. இந்த ஆராய்ச்சிக் குழுவினர் தற்போது 8,000 எறும்பு வகைகளை புகைப்படம் எடுத்திருக்கின்றனர். அமெரிக்க அருங்காட்சியகங்களில் இருந்து மட்டும் சுமார் 30,000 எறும்பு வகைகளை சேகரிப்பதற்கு அவர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

எறும்புகளிடையே காணப்படும் பால் வேறுபாடு, வேறு பிரிவுகள், ராணி எறும்புகள், சிப்பாய்கள் மற்றும் சேவகர்கள் போன்ற அனைத்து வித விபரங்களும் அவை தொடர்பான புகைப்படங்களும் இந்த இணையத்தளத்தில் உள்ளடக்கப்பட்டு வருகின்றன. அத்துடன், எறும்புகளின் உடலுறுப்புக்கள் என்பன துல்லியமாக படம்பிடிக்கப்பட்டு-விசாலமாக்கப்பட்டு இந்த இணையத்தளத்தில் உட்சேர்க்கப்பட்டு வருகின்றன. ஆக, எறும்புகள் தொடர்பில் இதுவரை கண்டிராத காட்சிகளையும் விபரங்களையும் படங்களையும் இந்த இணையத்தளத்தினூடாக கண்டறியக்கூடியதாக இருக்கும்.

"இந்த இணையத்தளத்தினூடாக விஞ்ஞானிகள் மட்டுமன்றி, உலகம் முழுவதும் உள்ள அனைவரும் பயன்பெற முடியும்" என்று கலாநிதி ஃபிஷர் கூறியுள்ளார்.

(இ)

எறும்புகளின் உடலுறுப்புக்களைக்கூட விசாலமாக்கிப் பார்க்க முடியும்.






'ஏன்ட்வெப்' இணையத்தளத்தின் முதற்பக்கம்.






எறும்பொன்றின் உருவமைப்புத் தொடர்பில் இதுபோன்ற பூரண விளக்கத்துடனும் தெளிவுடனுமான ஒரு படத்தினைக் காணக்கிடைப்பது இதுவே முதற்தடவையாகும்.

இந்த திட்டத்திற்குத் தலைமைதாங்கும் கெலிஃபோர்னியா பல்கலைக்கழக கலாநிதி ப்ரயன் ஃபிஷர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையாளர்: மருத்துவம்

## போல் ஹெர்மன் முல்லர்

**1899** ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் திகதி சுவிட்ஸர்லாந்து நாட்டில் பிறந்த ஹெர்மன் முல்லர் கல்வியில் சிறந்து விளங்கினார். சுவிட்ஸர்லாந்து நாட்டின் உயர் பல்கலைக்கழகமொன்றில் உயர் கல்வியைத் தொடர்ந்த அவர், தமது கல்வியை முடித்துக்கொண்டு தொற்றுநோய்கள் பற்றிய தீவிர ஆய்வில் ஈடுபட்டார். தொற்றுநோய் வகைகளான மலேரியா, மஞ்சள் காமாலை போன்ற நோய்களுக்கு சிறந்த நிவாரணியைக் கண்டுபிடிப்பதே, அவரது ஆய்வின் நோக்கமாக இருந்தது.

19 ஆம் நூற்றாண்டில் மலேரியா எனும் கொடிய நோயினால் உலகின் பல பாகங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். இந்நோய் மருத்துவ உலகிற்குப் பெரும் சவாலாகவே இருந்தது. இந்த மலேரியா நோயினைப் பூண்டோடு ஒழிக்கும் பணியை கையிலெடுத்து 1881 முதல் 1899 வரை ஏறக்குறைய இருபது வருடத்தை ரொனால்ட் ரொஸ் என்பவரே செலவழித்து மலேரியா நோயின் தீவிரத்தைக் கண்டுபிடித்தார். அதன் ஆரம்பத்தையும் ஆரம்ப அறிகுறிகளையும் கண்டறிந்தார். நுளம்புகளால்தான் மலேரியா பரவுகிறது என்ற தீர்வினை அவர் தந்ததோடு, மலேரியா நோய் குறித்த சமன்பாடுகளையும் நிறுவினார்.

ஆனால், மலேரியா, மஞ்சள் காமாலை போன்ற தொற்றுநோய்களுக்காக Dichloro-Dipheny-Trichloroethane எனும் பூச்சிக் கொல்லி மருந்தைக் கண்டுபிடித்து தொற்றுநோய்களுக்கான சிறந்த நிவாரணத்தைக் கண்டுபிடித்தவர் போல் ஹெர்மன் முல்லர் அவர்களே ஆவார். இவரின் இந்தக் கண்டுபிடிப்புக்காக, பல விருதுகள் கிடைத்தன. அத்துடன், முல்லரே முதலாவதாக DDT குறித்து காப்புரிமை பதித்தமையால் 1948 ஆம் ஆண்டிற்குரிய நொபெல் பரிசும் அவருக்கே வழங்கப்பட்டது.

பல பூச்சிக்கொல்லிகள் மற்றும் அவற்றின் நோய் தீர்க்கும் குணங்கள் பற்றி வருடக்கணக்கில் ஆய்வு செய்தே முல்லர் DDT யைக் கண்டுபிடித்தார். இதுவரை அறியப்பட்டுள்ள சிறந்த பூச்சிக்கொல்லி மருந்துகளில் DDT யும் ஒன்று.

மலேரியா, மஞ்சள் காமாலை உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு சிறந்த நிவாரணியை முதன்முதலாகக் கண்டுபிடித்த மனிதக் காவலரான போல் ஹெர்மன் முல்லர் 1965 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி தனது 66 ஆவது வயதில் இயற்கை எய்தினார்.

-ஆர்.ஜெ


(1899-1965)

# விஜய் மாணவர் கழகம்


அங். இல: 4760
எம்.சேபா பேகம், மீராகேணி, ஏறாவூர்.


அங். இல: 4761
கே.குமுதினி, இங்கிரிய, இரத்தினபுரி.


அங். இல: 4762
எ.எ.சஜா, ஓட்டமாவடி, மட்டக்களப்பு.


அங். இல: 4763
ஆர்.எம்.இப்லால், இஸ்னாபுள்ள லேன், தர்கா நகர்.


அங். இல: 4764
என்.எம்.நஸ்ரான், சின்னக்குடியிருப்பு, கல்பிட்டிய.


அங். இல: 4765
ஏ.எம்.ஆஹிட், அல்ஹெம்பிடிய, பாணகமுவ.


அங். இல: 4766
வ.இசையழகன், கச்சாய் வீதி, கொடிகாமம்.


அங். இல: 4767
சி.திவ்வியா, நெளுக்குளம், வவுனியா.


அங். இல: 4768
இ.கோபிகிருஷ்ணன், அன்புவழிபுரம், திருகோணமலை.


அங். இல: 4769
நி.டேய்ஷி, கூமாங்குளம், வவுனியா.


அங். இல: 4770
எம்.அர்ஷாத், றக்ஸபான, மல்வானை.


அங். இல: 4771
பெ.அனஸ்ரன், வங்காலை, மன்னார்.

# நூல் அறிமுகம்


## அழகியலில் ஓவியக்கலை- கலை வரலாறு

### இரண்டாம் பாகம் வெளியாகியுள்ளது

(தரம் 10-13 மாணவர்களுக்கு பயன்மிக்கது)

அழகியலில் ஓவியக்கலை - கலை வரலாறு எனும் நூலின் இரண்டாம் பாகம் வெளியாகியுள்ளது. கலாபூஷணம் எஸ்.எல்.எம்.மஹ்ரூப் எழுதியுள்ள இந்நூல் தரம் 10 தொடக்கம் 13 வரையான மாணவர்களுக்கென புதிய பாடத்திட்டத்திற்கமைய எழுதப்பட்டுள்ளது. இதில் இலங்கை, இந்திய ஐரோப்பிய, கிரேக்க கலை வரலாறுகள் தெளிவாக வழங்கப்பட்டுள்ளன.

கலைத்துறையில் கல்வி கற்கின்ற உயர் வகுப்பு மாணவர்களுக்கு தமிழ்மொழியிலான பாடநூல் ஒன்று இல்லாத குறையினை 340 பக்கங்களைக்கொண்ட இந்நூல் நிவர்த்தி செய்யும் வகையில் அமைந்துள்ளது. மேலும் நூலின் பின்னிணைப்பாக, வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஓவியங்கள், கலைப்படைப்புகள் மற்றும் கலைப்பொருட்கள் ஆகியன வர்ணப்படங்களாக வழங்கப்பட்டுள்ளமையும் இந்நூலின் சிறப்பம்சமாகும். இதுவொரு மெக்ஸ்ப்ரோ பப்ளிகேஷன் வெளியீடாகும்.



நூலின் விலை : 650/=
முகவரி: இல 132A, தவுலாகல, தும்பல்லன்க, ஹந்தெஸ்ஸ.
தொ.பே.இல : 0777911091

# பலன் கருதாது செய்த உதவி!

மின்குமிழ் மற்றும் நூற்றுக்கணக்கான கண்டுபிடிப்புகளையும் மேற்கொண்ட தோமஸ் அல்வா எடிசன், சிறுவனாக இருந்தபோது, ரெயில் நிலையத்தில் பத்திரிகை விற்று வருமானம் பெற்று வந்தார். இவ்வாறு ஒருநாள் அவர் பத்திரிகை விற்றுக்கொண்டிருந்தபோது, ரயில் தண்டவாளத்தில் ஒரு குழந்தை விளையாடிக்கொண்டிப்பதைக் கண்டார். திடீரென எதிரே வேகமாக ரயில் ஒன்று வந்துகொண்டிருந்தது. பதட்டமடைந்த அவர் உடனே ஓடிச்சென்று அக்குழந்தையைத் தூக்கி அதன் உயிரைக் காப்பாற்றினார்.



பின்னர் அக்குழந்தை ரயில்வே பாதுகாப்பு அதிகாரியினுடைய குழந்தை என்பது தெரிய வந்தது. எடிசன் செய்த உதவிக்குப் பதிலாக, அந்த அதிகாரி எடிசனின் விருப்புக்கு அமைய அங்கு காணப்பட்ட பழைய ரயில் பெட்டி ஒன்றின் மூலையில் சிறிய ஆய்வுகூடமொன்றினை அமைக்க இடம்கொடுத்தார். இது எடிசனின் நீண்ட நாள் கனவு! எடிசனின் ஆய்வுகளுக்கும் அவரது தன்னம்பிக்கைக்கும் அது பேருதவி புரிந்தது. இதுவே அவரது பிற்கால சாதனைகளின் தொடக்கம் என்றும் கூறலாம்!

ஜெ.விபாகர்

படத்தை இங்கே ஒட்டவும்



## விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்: ..................................................
முகவரி: ..................................................
..................................................
பாடசாலை: ..................................................
வகுப்பு: ..................................................
திகதி: ..................................................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலங்குகள் உலகின் ஜாம்பவான்: யானைகள்



காண்பவர் மனதைக் கவரும் பலம்கொண்ட யானைகளின் புத்தி சாதுரியம் மிகவும் வியப்புக்குரியதாகும். பருத்த சரீரமும் அதன் தோற்றமும் பார்ப்போர் அனைவரையும் கவரும் தன்மை கொண்டவை. மனிதனுக்கும் இந்த உயரிய விலங்கிற்கும் இடையிலான தொடர்பு பல்லாயிரம் ஆண்டுகளுக்கான வரலாற்றினைக் கொண்டது.

## யார் இவர்கள்?

யானைகள் பூமியில் வாழும் பிரமாண்டமான பாலூட்டி விலங்குகளாகும். விலங்குகள் உலகின் 'மெமலியா' பிரிவைச் சேர்ந்த 'கொடேட்டா' இனத்தைச் சேர்ந்த யானைகளின் ரகம் 'எலிபண்டே' எனப்படுகின்றது. யானைகள் ஆசியா, ஆபிரிக்கா யானைகள் என்று இரு வகைப்படுகின்றன. ஆசிய யானைகள் Elephas manimus மற்றும் ஆபிரிக்க யானைகள் Loxodonta africana எனப்படுகின்றன.


## ஆசிய யானைகள்


இந்தியா, இலங்கை, சீனா மற்றும் தென்கிழக்காசிய நாடுகளில் யானைகள் அதிகமாக வாழ்கின்றன. இவற்றில் மிகவும் பெரிய யானைகள் இலங்கையில் வசிக்கின்றன. நன்கு வளர்ச்சி அடைந்த யானைகள் 5,400 கிலோ கிராம் நிறை கொண்டவை. உயரம் 3.4 மீற்றராகும். அளவில் சிறிய யானைகள் போர்னியோ தீவுகளில் வசிக்கின்றன. அதிகளவான ஆசிய யானைகள் இந்தியாவில் உள்ளன. நீண்ட தந்தங்கள் இவற்றுக்கு காணப்படுகின்றன.

## ஆபிரிக்க யானைகள்

ஆபிரிக்கக் கண்டத்தில் 37 நாடுகளில் யானைகள் வசிக்கின்றன. ஆசிய யானைகளைவிட இவை அளவில் பெரியவை. ஆண், பெண் யானைகளுக்கும் தந்தங்கள் உள்ளன. ஆபிரிக்க யானைகள் உடனடியாக சீற்றமடையும் தன்மை கொண்டவை. நன்கு வளர்ச்சி அடைந்த யானைகள் 12,000 கிலோகிராம் நிறை கொண்டவையாக இருக்கின்றன. உயரம் 3 மீற்றர் இவற்றின் தந்தங்கள் நீளம் குறைவானதாக இருந்தாலும் நிறை அதிகமானதாக காணப்படும்.

## ஆசிய யானைகளைப் பற்றி அறிவோம்








## உணவு முறைகள்

யானைகள் தாவரங்களை உண்பவை. நாளொன்றுக்கு 16 மணித்தியாலங்கள் வரை உணவு தேடுவதற்கும் உணவை ருசித்து உண்பதற்கும் செலவிடுகின்றன. தாவர இலைகள், தண்டுகள், மரங்களின் வேர்கள், புதர்கள், மருத்துவ மூலிகைகள், இளம் தண்டு தாவரங்கள், பழங்கள் என்பன யானைகளின் விருப்பத்திற்குரிய உணவு வகைகளாகும். நன்கு வளர்ச்சியடைந்த யானைகள் நாளாந்தம் 140-270 கிலோகிராம் உணவினை உட்கொள்கின்றன. தும்பிக்கைகளினால் நீரை உறிஞ்சி வாயினுள் சேமித்துக்கொள்கின்றன. இதன்மூலம் ஒரே தடவையில் 14 லீற்றர் நீரை எடுத்து அருந்தும் ஆற்றலை யானைகள் பெற்றுள்ளன.

## விசேட இயல்புகள்

- யானைகளால் திறம்பட நீந்திச் செல்ல முடியும்.
- மணித்தியாலத்திற்கு 40 கி.மீற்றர் வேகத்தில் ஓடக்கூடிய ஆற்றல் பெற்றவை.
- 50 முதல் 70 ஆண்டுகள் வரை ஆயுட்காலம் கொண்டவை.
- தாயின் வயிற்றில் கருவாகி 22 மாதங்களின் பின்னரே குட்டிகளை ஈனுகின்றன.
- நாளாந்தம் 2 மணித்தியாலங்கள் மட்டுமே உறங்கக்கூடிய இவை, உணவு தேட அதிக நேரத்தை செலவிடுகின்றன.

## உடல் அமைப்பு

**தும்பிக்கை:** மேல் உதட்டுப் பகுதியும் நாசியும் இணைந்தே தும்பிக்கை உருவாகியுள்ளது. மிகவும் உணர்ச்சி மயமானது. சிறிய புல் முதல் மரக் கிளை வரை உடைக்கும் ஆற்றல் மிக்கது. தரையைத் தொடும் தும்பிக்கை, மரத்தையும் பற்றிப் பிடிக்கும் உயரம் கொண்டது. நீந்தும் போது உடலை சமநிலையாக வைத்துக்கொள்ள தும்பிக்கை உதவுகின்றது.

**தந்தம்:** தந்தங்கள் தொடர்ச்சியாக வளரும் தன்மை கொண்ட அதேவேளை, தும்பிக்கையின் இரு மருங்கிலும் காணப்படுகின்றன. கல்சியம் பொசுபேட்டினால் தந்தம் உருவாகியுள்ளது. அதன் மேற்புறம் மென்மைத் தன்மை வாய்ந்தது.

**பற்கள்:** யானையின் பற்கள் ஏனைய விலங்குகளைவிட வேறுபட்டவையாகும். அவற்றுக்கு 28 பற்கள் மட்டுமே உள்ளன.

அதன் ஆயுட்காலம் முழுவதும் பற்களின் வளர்ச்சி நிகழ்ந்துகொண்டே இருக்கின்றது. முதலில் பால்பற்களும் பின்னர் நிரந்தரப் பற்களும் முளைக்கின்றன. ஒரு வருடப் பூர்த்தியின் பின்னரேயே தந்தங்கள் உருவாகின்றன.

**செவிகள்:** உடலின் வெப்பநிலையினைக் கட்டுப்படுத்தும். இதன் செவிகள் அளவில் பெரியதாகும். மிகவும் மெல்லிய தோலினால் உருவாகியுள்ள செவிகளில் முழுவதுமாக மெல்லிய குருதி நாளங்கள் காணப்படுகின்றன.

**சருமம்:** மிகவும் கடினத்தன்மை வாய்ந்தது. தோலின் அடர்த்தி 2.5 சென்ரிமீற்றராகும். முகத்தினைச் சூழவுள்ள மற்றும் செவிப்பறை பகுதிகள் மென்மையானவை. ஆசிய யானைகளின் உடலில் ஆபிரிக்க யானைகளைவிட அதிக உரோமங்கள் உள்ளன. ஆபிரிக்க யானைகள் கடும் கருமையான நிறத்தைக் கொண்டிருப்பதுடன், அவயவங்களில் அடையாளங்கள் எதுவும் காணப்படமாட்டாது.

**கால்கள்:** உடல் எடையைத் தாங்கும் விதமாகக் கால்கள் அமையப்பெற்றுள்ளன. நேரான கால்கள் மற்றும் தட்டையான அடிபாதங்கள் காரணமாக, நீண்டநேரம் யானைகளால் நிற்க முடியும். வட்ட வடிவ அடிப்பாதங்களின் எலும்புகள் மிகவும் பலம் வாய்ந்தவையாகக் காணப்படுவதுடன், கீழ்ப்பகுதி பஞ்சு போன்று மென்மையாகவும் உள்ளன. (-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினியில் ஒரே வகையான வீடியோ ஃபைல்களை நீக்குவதற்கு



கணினியின் ஹார்ட்வெயாரில் சேமிக்கப்படும் பல வகையான கோப்புகளில் அடங்கும் வீடியோ ஃபைல்கள் சில சந்தர்ப்பங்களில் இரட்டிப்படைவதற்கான (Duplicate) சாத்தியங்கள் காணப்படுகின்றன.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் இரட்டிப்படைந்த ஃபைல்களைத் தேடிக் கண்டறிவது மிகக் கடினமான காரியம் ஆகும். இதனை இலகுபடுத்துவதற்கு Duplicate Video Search எனும் மென்பொருள் பெரும் பயனுள்ளதாகக் காணப்படுகின்றது. இம்மென்பொருளானது, கணினியில் காணப்படும் அனைத்து வகையான வீடியோ ஃபைல்ஸ்களையும் தேடிக் கண்டறிந்து அவற்றை ஒப்பிடும் திறனைக் கொண்டுள்ளது. இதன்மூலம் இரட்டிப்படைந்த ஃபைல்ஸ்களை இலகுவாக கணினியிலிருந்து நீக்கிவிட முடியும்.

# பல்வேறு வசதிகளைக் கொண்ட மென்பொருள்



கணினிகளைப் பயன்படுத்திச் செய்யப்படும் பல்வேறு வேலைகளுக்கென நாம் தனித்தனியாகப் பல மென்பொருட்களை நிறுவி வைத்திருப்போம். இதேநேரம், பல வசதிகளைக் கொண்ட ஒரு மென்பொருளை நிறுவினால் கணினியின் ஹார்ட்டிஸ்கில் இடம் மீதப்படுத்தப்படுவதுடன், கணினியின் தொழிற்பாடும் வினைத்திறன் கூடியதாகக் காணப்படும்.

இதன் அடிப்படையில் IAVCenter என்ற மென்பொருளானது Capture, record, broadcast போன்ற பல்வேறு வசதிகளைக் கொண்டுள்ளதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இம்மென்பொருளின்மூலம் தனிப்பட்ட இணையத்தளத்திற்குப் பாதுகாப்பாக கோப்புகளை பரிமாறுதல், வேறொரு நபருக்கு அனுப்புதல், தரவேற்றம் போன்றவற்றையும், எந்தவொரு மூதலிருந்தும் (Source) ஒலிப்பதிவு செய்யக்கூடிய வசதியையும் கொண்டுள்ளதோடு இலகுவாகவும், விரைவாகவும் பயன்படுத்தக்கூடியதாகக் காணப்படுகின்றது.

# Ram Memory யின் செயற்பாடுகள்



கணினி பயன்பாட்டில் புதியவர்கள் மட்டுமன்றி, பழகியவர்களும்கூட அடிக்கடி குழப்பத்துடன் பயன்படுத்தும் அல்லது அறிந்தும் புரியாமல் இருக்கும் இரண்டு சொற்கள் Memory and Storage ஆகும். இதனைத் தயாரிப்பவர்கள் பயன்படுத்தும் சொற்களும், இவை குறித்த விளம்பரத்தில் வரும் சொற்களும்கூட பலரைக் குழப்பத்தில் ஆழ்த்தும். பலர் ஹார்ட் டிஸ்க், ரெம், டிஸ்க், எச்.டி.டி. ரெண்டம் எக்சஸ் மற்றும் பல சொற்களை ஒன்றின் இடத்தில் இன்னொன்றை வைத்துப் பயன்படுத்துகின்றனர். எனவே, இவை ஒவ்வொன்றும் எதனைக் குறிக்கின்றன என்பதைத் தெளிவாகப் பார்க்கலாம்.



## 'ரெம்'
## (Ram: Random Access Memory)

இதனை ஒத்த தொழில்நுட்ப சொற்கள் Memory, Random Access Memory, Short Term Memory, DDR Memory, DDR2 Memory, DDR3 Memory மற்றும் மேலும் சில.

பயன்பாடு: தற்காலிகமாக புரோகிராம்கள் கையாளும் தகவலினைத் தேக்கி வைக்கவும், மாற்றவும் இந்த மெமரி பயன்படுத்தப்படுகிறது. இதில் பதியப்படும் தகவல்கள் (டேட்டா), புரோகிராம்கள் உருவாக்கும் டேட்டா, ஏற்கனவே நிலைத்த மெமரி சாதனங்களில் பதியப்பட்டு இதற்கு மாற்றப்படும் டேட்டா எனப் பலவகைப்படும். இந்த டேட்டா இதற்கு மேலும் தேவைப்படாது என்ற நிலை வரை இந்த ரெம் மெமரியில் பதியப்பட்டு வைக்கப்படும்.

ரெம் மெமரி சரியாக இயங்கத் தொடர்ந்து மின்சக்தி இருக்க வேண்டும். மின்சக்தி இல்லாமல் போனால், அனைத்து தகவல்களும் அழிந்துபோகும். வழக்கமான ஸ்டோரேஜ் சாதனங்களின் செயல் வேகத்தைக் காட்டிலும் ரெம் மெமரியின் செயல் வேகம் பல மடங்கு அதிகமானது. எனவே, ஒரு புரோகிராம் இயங்கிக்கொண்டிருக்கும்போது, அதனால் உருவாக்கும் டேட்டா தங்கிச் செல்ல இந்த வகை மெமரியே முதல் நிலையில் உகந்த மெமரியாகும்.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2012, செப்டெம்பர் மாதம் 19 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday September 19, 2012.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org